பக்கங்கள்
24

# புதுவிதி
PUTHU VITHI

விலை
20/=

புதுமை : 02 | 21 ஒக்ரோபர் 2017 | விதி : 71



என்று தணியும் இந்த சுதந்திர தாகம்



இலங்கை - மியன்மார் அசாத்திய ஒற்றுமை



என்ன செய்யப்போகிறோம்?



மறைக்கப்பட்ட அத்திபாரம்




'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'

## சினிமா செய்திகள்

தீபிகா படுகோனின் பத்மாவதி படத்தின் டீசர் பட்டையைக் கிளப்பி வருகின்றது. பாகுபலியையே விஞ்சி விட்டது எனப் பலரும் பராட்டி வருகிறார்கள்.

இஸ்லாமியரான மொகலாய மன்னன் அலாவுதீன் கில்ஜி, இந்துவான சித்தூர் ராணி பத்மாவதியின் காதல் கதையே இப்படத்தின் கதை. இதில் அலாவுதீன் கில்ஜியாக ரன்வீர் சிங் நடிக்கிறார்.



மதி சுதாவின் "உம்மாண்டி" முழு நீள ஈழத்து வெளிவரவிருக்கிறது. எதிர்வரும் அக்டோபர் 28, திகதிகளில் ராஜா 2 திரையரங்கில் 5.1 ஒலித்தரத் வெளியிடப்பட இருக்கின்றது.

சனிக்கிழமை (28.10.2017) பிற்பகல் 3 மணிக்கு ஞாயிற்றுக் கிழமை (29.10.2017) பிற்பகல் 2:30 காட்சிகளும் காண்பிக்கப்படவிருக்கிறது. குறிப்பி நேரத்திற்கு மட்டுமே திரையரங்கு வாடகைக்கு அந்த நேரதில் திரையிடல் நடைபெறும்.

" தனது அடுத்த சினிமாவுக்கான ஒரு அத்திவா உதவுமாறு சக கலைஞர்களையும் ஈழசினிமா ஆ யும் படக்குழுவோடு சேர்ந்து வேண்டி நிற்கிறேன் தயாரிப்பாளர் மதிசுதா.

# 16 வருடப் பயணம்




தமிழரசுக் கட்சி தமிழர் கூட்டணியாகி பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக மலர்ந்து இன்றுடன் 16 வருடங்கள் கடந்து விட்டன. கூட்டமைப்பு கடந்து வந்த பாதையை திரும்பிப் பார்ப்பது அவசியம்.

நாட்டின் எதிர்க்கட்சியாகவும், வடக்கு மாகாணத்தின் ஆட்சிக் கட்டிலிலும், கிழக்கு மாகாணத்தில் ஆட்சியாளர்களின் பங்காளிக் கட்சியாகவும் இன்று கூட்டமைப்பு உள்ளது. தமிழ் மக்களின் பிரதிநிதிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரே எனக் காட்டினாலும் அவர்களின் செயற்பாடுகளின் பிரதிபலிப்புக்கள் அவ்வாறு அமைகிறதா என்பது பெரும் கேள்வியே.

தமிழரசுக் கட்சியிலிருந்த தந்தை செல்வநாயகம் தமிழ் தேசிய நலனைக் கருத்தில் கொண்டு தமிழர் கூட்டணியை உருவாக்கினார். அன்றே தமிழர் கோஷம் தனிநாடுதான். பின்னர் தந்தை செல்வா மறைவுக்குப் பின்னர் கட்சியை அமிர்தலிங்கம் வழி நடத்த 1983 க்குப் பின்னர் இயக்கங்கள் தலையெடுக்கத் தொடங்கிய காலகட்டத்தில் தமிழர் தலைமையும் தடம் மாறத் தொடங்கியது. பெரும்பாலானோர் இடம்பெயர்ந்தனர். இந்தியாவுக்கு சென்றனர். நீண்ட காலப் போராட்டத்தின் இடையே 2002 ஆம் ஆண்டளவில் தோன்றிய சமாதானக் காலத்தில் ஒரு தமிழர்களின் அரசியல் தேவையைக் கருத்தில் கொண்டு விடுதலைப் புலிகளின் தலைமை தமிழர் கூட்டமைப்பைச் சம்பந்தன் தலைமையில் உருவாக்கியது.

இன்று கூட்டமைப்பைப் புலிகள் தலைமை உருவாக்கவில்லை என்று சம்பந்தன் சொல்லித் திரிவது வேறு கதை. அதிலே தற்பொழுது கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஒட்டுக் குழுக்கள் ஒன்றுகூட இடம் பெற்றிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு புலிகளால் உருவாக்கப்பட்டது என்பதனால்தான் தமிழ் மக்கள் மேலும் அக்கட்சிக்கு ஆதரவாகவும், அனுசரணையாகவும் இருந்தனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமோக வெற்றியடைந்தது.

2009 விடுதலைப் புலிகள் பின்னடைவைச் சந்தித்த பின்னர் கூட்டமைப்பின் சுயஷரூபம் வெளிவரத் தொடங்கியது. அதுவரை புலித் தலைமைக்குப் பயந்து இருந்த கூட்டமைப்பும் பிற தமிழ் அரசியல் வாதிகளும் 'தடி எடுத்தவன் தண்டல் காரன்' என்ற வகையில் செயற்படத்தொடங்கினர். பின்பு கூட்டமைப்பு இந்தியா, அமெரிக்கா, இலங்கை அரசு என்று கன்னை பிரியத்தொடங்கியது. விடுதலைப் போராட்டத்தை காட்டிக் கொடுத்த புளொட் உள்வாங்கப் பட்டது. ஆனந்த சங்கரியும் கூட்டணியைக் கொண்டு தனித்துச் சென்றதனால் 2013 தேர்தலில் கூட்டணியைப் பதிவு செய்யவேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்றும் அதிலுள்ள உறுப்பினர்களின் குழப்பம் காரணமாகக் கைவிடப்பட்டது. எனவே தமிழர் கூட்டணிச் சின்னத்தில் போட்டியிடாது தமிழரசுக் கட்சிச் சின்னத்தில் போட்டியிட்டனர் கூட்டமைப்பினர்.

பின்னர் கிழக்கு மாகாணத் தேர்தல் நடைபெற்றது. கிழக்கு மாகாணத்தில் மகிந்த ஆட்சியிருந்தபோது காணப்பட்ட அரசியல் நிலைமாறியது. மைத்திரியின் ஆட்சிக்குப் பின்னர் கூட்டமைப்பானது ஆளும்கட்சிக்குப் போக வேண்டியதாக சூழ்நிலை அமைந்தது.

இத்தகைய கூட்டமைப்பின் ஸ்திரமற்ற அரசியல் நிலைப்பாட்டால் தமிழ் - முஸ்லிங்கள் உறவும் வேறொரு நிலைப்பாட்டையே எடுத்திருக்கிறது. தமிழர் - முஸ்லிம் உறவுகளில் விரிசல் விழுவதற்குக் காரணமும் கூட்டமைப்பினது அக்கறையற்ற போக்கே. அது மட்டுமல்ல அவர்கள் கொண்டுள்ள அரச நலனும் இதற்குரிய ஒரு காரணமாகக் காணலாம். கூட்டமைப்பின் தொடர்ச்சியான இது போன்ற நடவடிக்கைகளால் முஸ்லிம் சமூகம் தமிழர் மீது நம்பிக்கை இழந்திருக்கிற தென்றும் சொல்லலாம். அவர்களும் இது போன்று பிரிக்கப்பட்ட சமூகமாகவே இருக்கின்றனர். கூட்டமைப்பினதும் அரசினதும் கூட்டுறவானது தமிழர் நன்மையை மேம்படுத்துவதிலும் பார்க்கப் பெரும்பான்மை இனத்தவரின் வள விருத்திக்கே அதிகம் வித்திட்டது. புதிய புதிய சிங்களக் குடியேற்றங்கள் வரத் தொடங்கின. அண்மையிலும் திருக்கோணமலையில் ஒரு புதிய குடியேற்றத்திட்டம் உருவாகியிருக்கிறது.

வட மாகாணத்தில் தேர்தல் களத்தில் நீதி அரசர் விக்கினேஸ்வரன் நிறுத்தப்பட்டார். தமக்குப் பூரண ஆதரவு தரும்பட்சத்தில் மக்களுக்குத் தேவையான அத்தனையையும் செய்வதாகக் கூறிப் பதவிக்கு வந்தார். உள்ளே வந்ததும் தான் அவருக்குக் கொஞ்சம் கொஞ்சமாக உள்வீட்டு அரசியல் தெரியவந்தது. காலப் போக்கில் அவர் எதிர் வினையாற்ற வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப் பட்டார். அங்கும் நியமிக்கப்பட்ட பல அமைச்சர்களுக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க முதலமைச்சர் தள்ளப்பட்டார். அவருக்கெதிராகவும் நம்பிக்கையில்லா பிரேரணை ஒன்றைக் கொண்டுவர உறுப்பினர்கள் முயன்றனர். போக்குவரத்து அமைச்சாராக இருந்த டெனிஸ்வரன் முதலமைச்சருக் கெதிராக வழக்கொன்றைத் தொடுத்து அதில் தோல்வியையும் தழுவிக் கொண்டார். தன்னில் நம்பிக்கை வைத்திருக்கின்ற மக்களுக்கு நீதி வழங்க வேண்டியவர் என்ற வகையில் தமிழ் மக்கள் பேரவையை தோற்றுவித்தார். இதன் பின்னர்கூட்டமைப்பிலுள்ளவர்கள் சிலருக்கும் முதலமைச்சருக்கும் இடையே பனிப்போரொன்று ஆரம்பித்தது. அது இன்றுவரை தொடர்கிறது.

அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர் களுக்கும் அரச வளங்கள் தாராளமாகக் கொடுக்கப்பட்டி ருக்கின்றன. எனவே தேசிய உணர்வும் சேவை மனப்பான்மையும் மழுங்கடிக் கப்பட்டிருக்கிறது. கூட்டமைப்பிலுள்ள உறுப்பினர்கள் அனைவரும் ஒரு அணியிலில்லாது செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர். தான்தோன்றித் தனமாக நடக்கின்ற னர். இன்று பல அணிகள் தோன்றி யிருக்கின்றன. அவர்களுக்குப் பல பின்னணிகள் உண்டு. அவர்கள் கையாலாகாத நிலைமையை எல்லோரும் அறியத்தொடங்கி இருக்கின்றனர். இருந்தும் விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்டது என்ற ஒரு காரணத்தினால்தான் இன்னும் கூட்டமைப்பில் நம்பிக்கை கொண்டிருக்கின்றனர். முடிவாகப் பார்த்தால் தாகத்தோடு இருககும் தமிழ் மக்களுக்குத் கூட்டமைப்பு கானல் நீரைத்தான் காட்டி நிற்கின்றது.

# கடந்தவார சமூக இணையத் தரவரிசை




## கொண்டாட்டம்

தீபாவளிக் கொண்டாட்டமே இந்த வாரம் சமூகவலைத்தளங்களை நிறைத்திருந்தன. கொண்டாட்டப் படங்கள், வாழ்த்து மழைகள் என சமூகவலைத்தளங்கள் மத்தாப்பு வெடித்திருந்தது.

புத்தாடைகளும், பட்டாடைகளும் களை கட்டிய படங்கள் நிறைந்திருந்த சமூகவலைத்தளங்களில் மாற்றியோசிக்கும் கூட்டத்தினர் சிலர் நரகாசுரனுக்காகப் பச்சாதபப்பட்ட பகிர்வுகளும் இருந்தன. காரணம் வேறில்லை தமிழன் என்ற இன அடையாளமே.

கோவில் பூசை, வெடி கொளுத்திய மகிழ்ச்சிகளும் சமூகவலைத்தளங்களை நிறைத்திருந்தன.




## கதற வைத்த மெர்சல்

தீபாவளி மகிழ்ச்சிக்கு விருந்தளிப்பதாக வந்த மெர்சல் படம் பற்றிய கருத்துக்கள், மோதல்கள், பனர் எரிப்புகள், தமிழ் உணர்ச்சிகளை கிளறிய வாரமாக கடந்த வாரம் சமூகவலைத்தளம் அமைந்து விட்டது.

விஜய்க்கு பனர் வைத்து ஆரவாரித்த கூட்டத்தினரைவிட அவர்களை வசைபாடிய கூட்டமே அதிகம் இருந்தது. முதல் நாளே படம் பார்த்து தங்கள் ரசிக விசுவாசத்தை வெளிப்படுத்தும் செல்பிகளும் அதிகம் இருந்தன.

விஜயின் கிழிக்கப்பட்ட பனரும், அலங்கரிக்கப்பட்ட பனர்களும் சமூகவலைத்தளங்களை கடந்த வாரம் கதற வைத்துவிட்டன என்பதே உண்மை.





## மாணவர் போராட்டம்


அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திய சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் அதிகளவானோரால் பகிரப்பட்டது.

ஒருநாள் மட்டுமே நடத்தப்பட்ட போராட்டம் ஜனாதிபதியுடன் சந்திக்க ஏற்பாடு செய்யப்பட்டதுடன் முடிவுக்கு வந்தது.

பல்கலை மாணவர்களின் இந்தப் பொறுப்புணர்வை பாராட்டும் பதிவுகள் அதிகம் இருந்தாலும் ஒருநாள் போராட்டத்தை கிண்டலடித்த போராட்டங்களும் சமூகவலைத்தள சுவர்களில் ஒட்டிக் கொண்டிருந்தன.













புதுவிதி
PUTHU VITHI

தொடர்புக்கு:
ஆசிரிய பீடம் : 021 493 7777
விநியோகம் : 021 492 7470
விளம்பரம் : 021 492 7466

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
puthuvithi@gmail.com


## பலிக்கிறது பிரபாகரனின் தீர்க்கதரிசனம்

போகிற போக்கில் நாட்டின் ஜனாதிபதியும் பிரதமரும் தாங்களே என அஸ்கிரிய, மல்வத்த மகாநாயக்க தேரர்கள் அறிவித்துவிட்டு ஆட்சிக்கட்டிலில் அமர்ந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. அப்படித்தான் இருக்கிறது அவர்க்ளின் பேச்சும் -- செயலும். இலங்கையின் கடந்த கால வரலாற்றைப் புரட்டுகையில் – மன்னர் ஆட்சிக் காலத்தில் இந்த மகாநாயக்க தேரர்கள் யாரைக் கை காட்டுகிறார்களோ அதாவது அவர்களின் ஆசியைப்பெறுகிறார்கிறார்களோ அவர்களே ஆட்சிக் கட்டிலில் அமரமுடியும்.

அந்நியர் ஆட்சிக் காலத்தில் பலம் குன்றிப் போயிருந்த இவர்கள், சுதந்திரத்தின் பின்னர் இழந்த பலத்தை மீண்டும் பெற்றுக் கொண்டார்கள். இதன் விளைவையை நாம் அறுவடை செய்து கொண்டிருக்கிறோம். இதற்காக நாம் கொடுத்த விலை கொஞ்சநஞ்சமா..?

அரச போகமே வேண்டாம் எனத் துறந்து துறவறம் பூண்டவர் புத்த பிரான். அவர் போதித்த கருணை, அகிம்சை வழிகளைப் பின்பற்றி ஒழுக வேண்டியவர்கள் துறவு வாழ்வில் இருந்து கொண்டே, அரச சுகங்களை போசித்துக் கொண்டு, மத வெறியும் இரத்த வெறியும் பிடித்து அலைந்து கொண்டிருக்கின்றனர்.

இவர்களின் மத, இரத்த வெறியே தமிழ் இளைஞர்களை ஆயுதம் ஏந்தத் தள்ளியது. கடந்த அரை நூற்றாண்டு காலமாக இலங்கையில் – வடக்கு, கிழக்கில் இரத்த ஆறு பெருக்கெடுக்க காரணமும் இதுவே. இப்போது நடைமுறையில் இருக்கும் அரசமைப்பு ஒற்றையாட்சி முறைமை தோற்றுப்போன ஓர் அரசமைப்பாகும். இதன் தோல்வியே உள்நாட்டுப் போரும் ஏற்பட்ட அழிவுகளும். நாட்டில் போரால் ஏற்பட்ட காயத்துக்கு மருந்திடுவதாகவே புதிய அரசமைப்பை உருவாக்க ரணில் – மைத்திரி அரசாங்கம் கூறிக்கொண்டது.

இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கான சிறந்த சந்தர்ப்பமாக இது அமையும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறிக்கொண்டது. புதிய அரசமைப்பு நாட்டின் பிரச்சினைக்கு எவ்வகைத் தீர்வை முன்வைக்கப் போகிறது என எதிர்பார்த்த சமயத்தில் – பெரும்பான்மை சிறுபான்மையினரின் நம்பிக்கையீனமே அதிகம் என்றபோதிலும் புதிய அரசமைப்பை ஆர்வத்துடன் எதிர்நோக்கியிருந்தனர். இந்நிலையில் நாட்டின் எல்லாமாக அமைந்த அஸ்கிரிய, மல்வத்த மகாநாயக்க தேரர்களின் அறிவிப்பு அதிர்ச்சியில் தள்ளியுள்ளது.

இவர்களின் கருத்தை எதிரக்க தென்னிலங்கையின் எந்த அரசியல் சக்தியும் துணியாது என்பது உண்மை. காரணம் தங்களின் அரசியல் இருப்பைத் தக்க வைப்பதே.மகாநாயக்க தேரர்களின் இப்போதைய நிலைப்பாட்டை பார்க்கையில் 'சிங்கள – பௌத்த பேரினவாத அரசு ஒருபோதும் எமக்கான தீர்வைத் தரும் என ஒருபோதும் நம்பி விட முடியாது" எனத் தலைவர் பிரபாகரனின் தீர்க்க தரிசன கருத்தே இன்று நிதர்சனமாகிறது.


'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'

இணையத்தின் வரலாற்றைத் திரும்பிப் பார்ப்பதில் உங்களுக்கு ஆர்வம் இருக்கிறதா? இணையம் நாளுக்குநாள் புதிதாகிக் கொண்டிருக்கும் நிலையில் பழைய கதை எல்லாம் எதற்கு என்று நினைத்தால், உங்களுக்கு ஓர் ஆச்சரியம் காத்திருக்கிறது. இணையம் கதைகளால் நிரம்பியிருக்கிறது, அந்தக் கதைகள் சுவாரசியமானவை என்பதுதான் அது.

அது மட்டுல்ல, இணைய வரலாற்றில் அறியாத விடயங்கள் இத்தனை இருக்கின்றனவா என்கிற வியப்பும் உண்டாகும். இணையத்தின் ஆதிக் கதைகளில் சுவாரசியமான கதை ஒன்றைப் பார்ப்பதற்கு முன் காலவரிசையாகப் படித்துப் பார்க்கலாம். ஒவ்வொரு காலகட்டத்திலும் வலையின் முக்கிய நிகழ்வுகளின் பின்னணி சுவாரசியமாக இருப்பதோடு, அதைவிடச் சுவையான வரலாற்றுப் பாடங்களையும் கொண்டிருக்கின்றன.

**வந்த கதை**

உதாரணமாக ஒரு கதையைப் பார்க்கலாம். வேர்ல்டு வைடு வெப் எனக் குறிப்பிடப் படும் வலையை உருவாக்கியது பிரிட்டனைச் சேர்ந்த டிம் பெர்னர்ஸ் லீ என்பதை நீங்கள் அறிந்திருக்கலாம். விஞ்ஞானியான அவர், சுவிற்சர்லாந்தில் உள்ள செர்ன் ஆய்வுக்கூடத்தில் பணியாற்றினார்.



# எல்லையில்லா... இணையத்தின் வரலாறு

அமெரிக்க புரோகிரமரான ஜே ஹொப்மனை அறிந்துகொள்ள வேண்டும். ஏனெனில், அவர்தான் இணையத்தின் மறக்கப்பட்ட கதைகளை எல்லாம் அகழ்வராய்ச்சி செய்து மீட்டெடுத்து வருபவர்.

ஹொப்மன், 'தி ஹிஸ்டரி ஒவ் லயின் வரலாற்றைப் பதிவு செய்வதற்கான இணையதளத்தை அமைத்திருக்கிறார். அதாவது, வேர்ள்ட் வைட் வெப் எனப்படும் வலை உருவான கதைகளை அவர் இந்தத் தளத்தில் வெளியிட்டு வருகிறார்.

**வலை கதை**

வலையின் வரலாற்றைப் படிக்க நினைப்பவர்கள் ஹாப்மன் தளத்துக்கு விஜயம் செய்ய வேண்டும். பரவலாக அறியப்பட்ட வலையின் தோற்றம், வளர்ச்சி, வெற்றி சார்ந்த தகவல்கள், கால வரிசை விவரங்களை எல்லாம் இதில் பார்க்கலாம். அவர் ஒரு வரலாற்று மாணவராம். படிக்கும் காலத்திலேயே இணையதள உருவாக்கத்தில் பகுதி நேரமாக ஈடுபட்டிருக்கிறார். பின்னர், அதுவே முழு நேரப் பணியாக மாறியது. கொஞ்சம் கொஞ்சமாக வலை தொடர்பான கதைகளைப் படித்தவரை அதன் ஆரம்பமும் அடுத்தடுத்து நிகழ்ந்த பாய்ச்சல்களும் வசீகரித்தன. அந்த ஆர்வத்தில் தான் கண்டெடுத்த கதைகளையும் அவற்றுக்கான இணைப்புகளையும் சேகரிக்கத் தொடங்கினார்.

இப்படிப்பட்ட தகவல்களைத் திரட்டித் தொகுத்து வலையின் முழுமையான கால வரிசையை உருவாக்கும் நோக்கத்துடன் இதற்கான இணையதளத்தை அமைத்தார். இணையக் கடலில் தான் தேடிக் கண்டுபிடிக்கும் கதைகளைப் பகிர்ந்து வருகிறார். இணையத்தின் வலை கருக்கொண்ட 1988 ஆம் ஆண்டு முதல் இந்தக் கதைகளைக் 1989 ஆம் ஆண்டில் வலையை உருவாக்குவதற்கான யோசனையை முன்வைத்து, 1991 இல் வலை பிரவுசர் மற்றும் எச்.டி.எம்.எல் இணைப்பு வசதி உள்ளிட்ட அம்சங்களோடு உதயமான வரலாற்றையும் அறிந்திருக்கலாம். ஆனால், இதற்கான யோசனையை லீ, உலக அளவிலான போன் புத்தகமாக முன்வைத்து தான் வெற்றிபெற்றார் என்பது உங்களுக்குத் தெரியுமா? லீ அப்போது பணியாற்றிய செர்ன் ஆய்வுக்கூடத்தில் இயற்பியல் சார்ந்த ஆய்வு தவிர வேறு விஷயங்களுக்கு அங்கு முக்கியத்துவம் இல்லை. ஆனால், லீ உலகம் முழுவதும் உள்ள விஞ்ஞானிகள் தங்கள் ஆய்வு தகவல்களை எளிதாகப் பகிர்ந்துகொள்வதற்கான வழியை எச்.டிம்.எம்.எல். உள்ளிட்ட அம்சங்களோடு உருவாக்க நினைத்தார். ஆனால், செர்ன் ஆய்வுக்கூடத்தில் இதற்கு அனுமதி கிடைப்பது கடினம்.நல்லவேளையாக டிம் பெர்னர்ஸ் லீ முன் வைத்த யோசனையை அவரது தலைமை அதிகாரியான மைக் செண்டல் ஆதரித்தார். எனினும், அதிகார மட்டத்தில் அது செல்லுபடியாகாது என அறிந்திருந்த அவர், அதற்கான மாற்று வழியை முன்வைத்தார். இந்த யோசனையை அப்படியே முன்வைக்காமல், செர்ன் ஆய்வுக் கூடத்துக்கு அவசியமான போன் புத்தகத்தை இணையத்தில் உருவாக்கித்தரும் திட்டமாக முன்வைக்குமாறு கூறினார்.

செர்ன் ஆய்வாளர்கள் உலகம் முழுவதும் இருந்ததால், அவர்கள் அனைவரையும் ஒருங்கிணைக்கக்கூடிய போன் புத்தகம் தேவைப்பட்டது. அந்தப் போர்வையில் ஐடியாவை வைக்கச் சொன்னார். அதன் படியே இணைய போன் புத்தகத்தை உருவாக்கும் முயற்சியாக வலை தொடங்கி, பின்னர் மெல்ல நிலைப்பெற்றது. இன்று வலையில்லாமல் வாழ்க்கை இல்லை எனச் சொல்லும் நிலையை உருவாக்கும் அளவுக்கு அது வளர்ச்சி பெற்றிருக்கிறது.



# என்ன செய்யப் போகிறோம்...?
# 15 இல் ஒரு குழந்தைக்கு உணவில்லை..!

## உலக உணவு தினத்தை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகின்றது.

மனித வாழ்க்கைக்கு ஆதாரம் நீர், உணவு, காற்று. எத்தனையோ நாடுகளில் தொன் கணக்கில் உணவுகள் வீணாகிக் கொண்டிருக்கும் இன்றைய நிலையில்தான், ஒரு வேளை உணவுக்குக்கூட வழியில்லாமல் ஹெய்ட்டியிலும் சாம்பியாவிலும் குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை உயிரிழக்கிறார் கள். உலகில் பட்டினியால் வாடும் நாடுகளின் பட்டியலில் நம் நாடு இலங்கை 84 ஆவது இடத்தில் உள்ளமை எமக்கு உவப்புக்குரிய விடயமல்ல 'உலக உணவு தினம்'. உலகின் அனைத்து மக்களுக்கும் போதுமான உணவு கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் என்ற குறிக்கோளை வலியுறுத்துவதே இந்த நாளின் நோக்கம். உலக உணவு தினம் (World Food Day) ஆண்டுதோறும் ஒக்ரோபர் 16ஆம் நாளன்று உலக நாடுகளில் கடைப்பிடிக்கப்படுகிறது.

1945ஆம் ஆண்டில், இதே நாளில் ஐக்கிய நாடுகள் சபையால், கனடாவில் உள்ள கியூபெக் நகரில், உலக உணவு மற்றும் விவசாயக் கழகம் (குயுழு) நிறுவப்பட்டது. 1979 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண் அமைப்பின் மூலம் இந்த தினம் அறிவிக்கப்பட்டது. தற்போது 150 இற்கும் மேற்பட்ட நாடுகளில் இந்த தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.

உலகளவில் நாடு விட்டு நாடு இடம்பெயர்ந்தோர் எண்ணிக்கை 2015 ஆம் ஆண்டின் கணக்குப்படி, 24 கோடியே 40 இலட்சமாக அதிகரித்துள்ளது. இது 2000 ஆம் ஆண்டைவிட 40 சதவீதம் அதிகம் என்கிறது ஒரு புள்ளிவிவரம். உலக அளவில் வளர்ச்சியடையாத நாடுகளில் சுமார் 98 சதவீத குழந்தைகள் போதுமான அளவுக்கு ஊட்டச்சத்துள்ள உணவில்லாமல் இருக்கிறார்கள் என்கிறது அந்தப் புள்ளிவிவரம். வளரும் நாடுகளில் 15 குழந்தைகளில் ஒரு குழந்தைக்குப் போதுமான உணவில்லை..


இவர்களுக்கான உணவுத் தேவையை எப்படிப் பூர்த்தி செய்யப் போகிறோம் என்பது நம் கண் முன் நிற்கும் மிகப் பெரிய கேள்வி. உணவு உற்பத்திக்கு ஏற்பட்டுள்ள இந்தச் சவாலை எதிர்கொள்வதற்காகவே உலக உணவு தினத்தில் (World Food Day) இடம்பெயர்பவர்களின் எதிர்காலத்தை மாற்ற வேண்டும்' (Change the future of migration) என்பதை இந்த ஆண்டுக்கான கருப்பொருளாக அறிவித்திருக்கிறது ஐ.நா. மேலும், உள்நாட்டிலேயே அதற்கான முயற்சிகளைத் தொடங்க வேண்டும் உணவு உற்பத்தியையும் அதிகரிக்க வேண்டும்' என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.



இந்த உணவு உற்பத்திக்குப் பெரும் தடையாக இருப்பது பருவநிலை மாற்றம். அதாவது, புவி வெப்பமயமா தல், காடுகளை அழித்தல் போன்றவற்றால் பருவநிலை மாறிக்கொண்டே இருக்கிறது. இதனால் பூமியின் தட்பவெட்ப நிலை, காற்று, ஈரப்பதம் என எல்லாச் சூழலியல் காரணிகளும் மாறிவிட்டன. உலகில் பெரும்பாலான விவசாயிகள், பருவமழையைச் சார்ந்துதான் விவசாயம் செய்கின்றனர். மேலும், பருவ காலமே விவசாயத்துக்கும் பயிர் உற்பத்திக்கும் முக்கியமானதாக உள்ளது.


### பசுமையான உலகம்

இந்தப் புவி நிலை மாற்றத்துக்கு இன்றியமையாத காரணம், புவி வெப்பமயமாதல். இன்றைய நிலையில், உலகில் மக்கள்தொகை அதிகரிப்பால், வாகனப் பயன்பாட்டால், காபநீர் ஒட்சைட், கார்பன் மோனாக்சைட் போன்ற நச்சு வாயுக்கள் அதிகரித்து வருகின்றமை. மற்றொரு பக்கம், நகரமயமாக்கல் காரணமாக காடுகள், இயற்கை வளங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன. இதனால், காடுகளின் அளவும் குறைந்துவருகிறது. இதனால் சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்டு, உலகின் வெப்பநிலை ஆண்டுதோறும் அதிகரித்துவருகிறது. இது தவிர, பனிக் கட்டிகள் உருகி கடல் நீர் மட்டம் உயர்தல் போன்ற, பல்வேறு பாதிப்புகளை இன்றைய பருவநிலை மாற்றம் உருவாக்கியிருக்கிறது.




இந்த நிலை மாற நாம் என்ன செய்ய வேண்டும்... நாடு என்ன செய்ய வேண்டும்... என்பதை யெல்லாம் சிந்திக்கவேண்டிய முக்கியமான தருணம் இது. அதே நேரத்தில், நவீன வாழ்க்கை முறையில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டியதும், அதற்கான மாற்று வழிகளைப் பற்றி சிந்திக்க வேண்டியதும் அவசியமாகிறது. இரு சக்கர வாகனப் பயன்பாட்டைக் குறைப்பது மாற்றாக, மிதிவண்டியைப் பயன்படுத்துவது. பிளாஸ்ரிக்கை தவிர்ப்பது. இப்படிப் பல முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

நீர் நிலைகளைப் பாதுகாத்தல், ஆறுகளைப் பாதுகாப்பது, மரக்கன்றுகள் நடுதல் எனத் திரும்பத் திரும்ப சூழலியலாளர்கள் வலியுறுத்தும் செயல்களில் ஈடுபடலாம். பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் பாதிப்பைப் பிறருக்குத் தெரிவிப்பது, குழந்தைகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவது போன்ற எளிய வேலைகளையும் செய்யலாம். உணவின் உற்பத்தியை அந்தந்த நாடுகளில் அதிகரிப்பதன் மூலம் உணவுக்காகவும், வாழ்க்கைக்காகவும் நடைபெறகூடிய மக்களின் இடப்பெயர்வை தடுக்கலாம். அதற்கு முக்கியமாக, விவசாயிகளின் வாழ்வாதாரம் கெடாமல் பாதுகாக்கவேண்டியது மிக மிக அவசியம். இந்த உலக உணவு தினத்தில் நாம் செய்யவேண்டியது இதைத்தான்!




# இலங்கை — மியான்மார் அசாத்தியமான ஒற்றுமைகள்

இன்லெ லேக் என்ற இடத்திலிருந்து மியான்மார் தலைநகர் யங்கோன் நோக்கி இரவு பேருந்தில் வந்து கொண்டிருந்தேன். யங்கோன் னில் இருந்து எழுநூறு கிலோமீட்டர் தொலைவில் இருக்கிறது இன்லெ என்ற சுற்றுலா கிராமம் . மலைகள் சூழ்ந்த அழகான ஏரியுடன் கூடிய இடம் , மியன்மாரின் கிழக்குப்புறமாக இருக்கிறது. ரொஹிங்கியாக்கள் வாழும் ராக்கேன் பிரதேசத்திலிருந்து வெகு தூரத்தில் இருந்தாலும், ஒவ்வொரு பேருந்தையும் நிறுத்தி சோதனை செய்கிறது மியன்மார் இராணுவம். அவர்களின் கண்கள் சந்தேகத்துக்கு இடமான முஸ்லிம்களை தேடுகிறது. முஸ்லிம் களை அவர்களின் முகச்சாயலில் வைத்து ஊகித்து கொள்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

என்னிடம் வந்த மியன்மார் இராணுவன் , ரூறிஸ்டா என்று கேட்டான், நான் ஓம் என்றேன். அடுத்த கேள்வியை அவன் யோசித்துக்கொண்டு இருக்கும் போதே, என் கைகளில் கட்டியிருந்த கோயில் நூலை பார்த்துவிட்டு, நீ இந்து என்று சொல்லி புன்னகைத்தான். இந்துக்கள் எங்கள் நண்பர்கள் என்று சொல்லி போலியாக சிரித்தான். நானும் சிரித்துக் கொண்டேன். அதே சிரிப்பை இலங்கையிலும் பல இடங்களில் பார்த்த பரீச்சயம் இருக்கிறது.

மற்றுமொரு சமயம், தலைநகர் யங்கோன்னில் வாடகைக் கார் ஒன்றில் ஏறினேன். ஓட்டுநர் நாம் இந்தியர்களா, எங்கிருந்து வருகிறோம் என்று கேட்டு தெரிந்து கொண்டார். நாம் இலங்கை என்றோம், “அது ஒரு பௌத்த நாடு” என்றார். “மியன்மாரிலும் பௌத்தம் தான், இங்கே இந்துக்கள் , கிறிஸ்தவர்கள் எல்லாம் இருக்கிறார்கள், அவர்களால் எந்த பிரச்சினையும் இல்லை. அவர்கள் எங்களுடன் நண்பர்களாக இருக்கிறார்கள். ஆனால் இந்த முஸ்லிம்கள்தான் பிரச்சனை, அவர்கள் இந்த நாட்டை சேர்ந்தவர்கள் இல்லை, எண்ணிக்கையில் கூடிக்கொண்டே போகிறார்கள்” என்று சொல்லும்போதே அவரின் முகம் சிவந்திருந்தது. “அபி ஒக்கம ஏக்க பௌல (நாங்கள் எல்லோரும் ஒரே குடும்பம் )” வகையான பேச்சுக்களை இலங்கையிலும் நான் நிறைய கேட்டிருக்கிறேன். டிரைவர் சீட்டுக்கு மேலே விராது தேரரின் படம் ஒட்டப்பட்டு இருந்தது. விராது தேரர் யார் என்பதற்கு, அவர் ஞானசார தேரரின் நண்பர் என்ற விவரணம் போதுமானது.

இலங்கையில் கடந்த காலத்தில் நடந்தது, அல்லது இப்போது நடக்கின்றது போலவே, மியன்மாரில் ஒரு பிரிவினருக்கு மதம் பிடித்திருக்கி றது. அது பேரினவாத மதம். அன்பை, ஜீவகாருண்யத்தை போதித்த புத்த மதத்தின் பேரால் அந்த மதம் பிடித்திருப்பதை தான் ஜீரணித்து கொள்ள முடியாமல் இருக்கிறது, இலங்கையை போலவே மியன்மாரும் இழந்தவைகள் அதிகம், ஆனால் அது தொடர்பில் அவர்கள் அலட்டிக் கொள்வதாக தெரியவில்லை.

பின்பற்றுவது ஒரே தேரவாத புத்த மதம் என்பதை தாண்டி, அந்த மனிதர்கள், அவர்களின் உடை, சுபாவம் என்று இலங்கைக்கும் மியன்மாருக்கும் எத்தனையோ ஆச்சரியமான ஒற்றுமைகள். அப்படியான சில ஒற்றுமைகளை பட்டியலிடுகிறது இந்த பதிவு.

ஆங்கிலேயன் வந்தான், பிரித்து ஆண்டான், பகைமையை வளர்த்தான்.

ரங்கூன் என் உயிரை வளர்த்தது, உயர்ந்தவன் ஆக்கியது. என்று சிவாஜி கணேஷன் நடித்த பராசக்தி படத்தில் ஒரு வசனம் அமைந்திருக்கும். ரங்கூன் அப்படித்தான் இருந்தது அன்று. வந்தாரை வாழவைத்து. உயர்ந்தவன் ஆக்கியது. ஆயிரத்து தொள்ளாயிரத்து நாற்பதுகளின் ஆரம்பத்தில் கிழக்கு ஆசியாவிலேயே அதி நவீன நகரமாக ரங்கூன் இருந்தது.

அக்காலத்தில் வாழ்ந்த ரங்கூன் நகரவாசி இப்படி எழுதுகிறார்... ‘ஆங்கில பெயர்களை தாங்கிய புதியதான சினிமா அரங்குகள், ட்ரம் வண்டிகள், பேருந்துகள், நகரத்தை நிறைத்து இருந்தன. நீங்கள் ரங்கூனில் வாழ்கிறீர்கள் ஆனால், மேல்தட்டு வாழ்வின் சகல வசதிகளும் கிடைக்கப்பெற்ற ஒரு காஸ்மோ பொலிட்டன் வாழ்க்கை முறை வாழ்வதற்கு நீங்கள் கொடுத்து வைத்தவர்கள் என்று அர்த்தம். பிரிட்டிஷ் பர்மாவை ஆண்ட ஆங்கிலேயன் தன்னுடைய சொந்த நாட்டில் எதுவெல்லாம் இருந்ததோ அத்தனையையும் பார்த்து பார்த்து செதுக்கிய நகரம் தான் பர்மா. இங்கு ஆங்கிலேயருக்கோ, அவர்கள் வர்த்தகர்களாக, கூலிகளாக கூட்டிவந்த இந்தியர்களுக்கோ எந்த குறையும் இருக்கவில்லை”

அன்றையகாலத்தில் பர்மா ஒரு சிங்கப்பூராக இருந்தது என்றால், தென் கொரியாவாக இருந்தது வேறு யாருமல்ல, இலங்கைதான். ஆங்கிலேயரின் செல்ல பிள்ளையாக சகல வசதிகளுடன் இலங்கை இருந்தது. ஆக, பர்மா இலங்கை இரண்டுமே ஒரு காலத்தில் ஆஹா , ஓஹோ என்று நன்றாக வாழ்ந்த நாடுகள் தான்.

இரண்டாவது பெரிய இன குழுமம் தான் முதலாவது டார்கெட்

பிழைப்பு தேடி வந்த இந்தியர்கள் கடின உழைப்பின் மூலம் தாங்கள் தேடிவந்த செல்வத்தை அடைந்து, உயர்ந்ததொரு வாழ்க்கையையே கட்டி எழுப்பி இருந்தார்கள். தங்கள் பிறந்த நாட்டை விட மேலானதொரு வாழ்க்கை அவர்களுக்கு கிடைத்ததால் பெரும்பாலானோர் திரும்பிச் செல்லவில்லை. பர்மாவில் இந்தியர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வந்தது, 1910 குடிசன மதிப்பீட்டிற்கு அமைவாக பிரிட்டிஷ் பர்மாவின் இரண்டாவது பெரிய குழுமமாக இந்தியர்கள் மாறி இருந்தார்கள்.

ரங்கூன் நகரில் மட்டும் பாதிக்கு மேலே இந்தியர்கள்தான். அவர்களுக்கு பர்மீசை விட வசதிகளும் நல்ல தொழில் வாய்ப்புக் களும் இருந்தன. செட்டியார்களும் பர்மா மக்களுக்கு கடன்களை கொடுத்து, பின்னர் நிலங்களை கையகப்படுத்திக் கொண்டார்கள். இந்தியர்கள் வளர்ச்சியும் ஆதிக்கமும் கடுப்பை கிளப்பியது பர்மா மக்களுக்கு. விளைவு கையில் 170 காசுகளை மட்டும் கொடுத்து 24 மணி நேரத்தில் அனைத்து இந்தியர்களும் கப்பல் ஏற்றி அனுப்பப்பட்டார்கள். தனுஷ் நடித்த அனேகன் படத்தில் இந்த காட்சிதான் இடம்பெற்றிருக்கும்.

உங்கள் இனம் வேகமாக வளர்கிறதா நீங்கள் தான் இரண்டாவது டார்கெட்

இந்தியர்களை துரத்தியபின் பர்மாவில் இந்துக்கள் மிகக் குறைவே, வெறும் 0.5வீதம்தான் இப்போது இருக்கிறார்கள். அவர்கள் அந்த மக்களோடு கலந்து விட்டார்கள். மியான்மாரிஸ் மொழியையே பேசுகிறார்கள். இப்போது இருக்கும் இந்தியர்கள் பொருளாதார நிலை மிக மோசமாகவே இருக்கிறது. அதனால் இந்துக்கள் பற்றி இப்போது அவர்களுக்கு கவலை இல்லை.

மியான்மார் இலங்கையை விட பத்து மடங்கு பெரிய நாடு, ஆனாலும் சனத்தொகை ரீதியாக பார்க்கும்போது அது இலங்கையை விட மூன்று மடங்கு அதிகமான சனத்தொகையை கொண்டிருக்கிறது. மியன்மாரில் முக்கால் வாசிக்கு மேல் நிலம் காலியாகவே இருக்கிறது, ஆனால் வந்தேறு குடிகள் என்று அவர்கள் கூறும் ரோஹிங்கியா முஸ்லிம்களின் இனப்பெருக்கம் தான், பெரும்பான்மையினரான மியான்மாரிஸ்களை தூக்கம் இல்லாமல் தவிக்க வைத்திருக்கிறது.

முஸ்லிம்கள் வளர்ந்து விடுவார்கள், நிறைய குழந்தைகள் பெற்றுக் கொள்கிறார்கள், அதிகம் செல்வம் வைத்திருக்கிறார்கள் என்ற ஆழமான பயமே வன்முறையாக வெளிவருகிறது.

( 18 ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத்துக் கிராமங்களும் மண் வாசனையும்

(தொடர் 06)

# அச்சுவேலி, ஆவரங்கால்

- வல்வை ரவி -



தமிழினத்தின் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் கிராமங்களுள் மண்வாசனை மிக்க தேசமாக அச்சுவேலி அமைகின்றது. இலங்கையின் வட மாகாணத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் வலிகாமம் கிழக்குப் பகுதியில் உள்ள கிராமமே இதுவாகும். வடக்கே தொண்டைமானாறும் தெற்கே ஆவரங்காலும் மேற்கே ஒட்டகப்புலமும் வயாவிளானும் கிழக்கே வல்லை தொடர்ச்சியுடன் கூடிய பரந்த வயல் வெளியும் பற்றைக் காடுகளும் எல்லையாகக் காணப்படுகின்றன.

அச்சுவேலி என்ற ஊர்ப் பெயருக்குப் பின்னால் பல காரணக் கருத்துக்கள் மறைந்துள்ளன. அச்சு என்பது தேயம், அகத்தி, மரம் அச்சித்தினை, அடையாளம், தேரச்சு, முத்திரை எனவும் மதுரை தமிழ்ப் பேரகராதி பொருள் கூறுகின்றது.


யாழ். நகரில் இருந்து பருத்தித்துறைக்குச் செல்லும் பெருந்தெரு அச்சுவேலியை மையமாகக் கொண்டே செல்கின்றது. இதனால் யாழ்ப்பாணத்தையும் பருத்தித்துறையையும் இணைக்கும் வண்டிச் சக்கர அச்சுப் போல் இக்கிராமம் இருந்து அச்சுவேலி என்ற நாமம் பெற்றது என்பர்.

அச்சுவேலி என்ற பெயர் தென்னிந்திய இடப்பெயர்களுடன் தொடர்புபடுத்தியும் நோக்கப்படுகின்றது. சேர நாட்டில் உள்ள அச்சன்குளம், அச்சன்துறை, அச்சன்பேட்டை முதலிய இடப் பெயர்களுடன் அச்சுவேலியை ஒப்பிடும்போது அச்சன் என்பதே அச்சு எனப் பிரிந்து அதாவது அச்சன் வேலி அச்சுவேலியாக மருவியிருக்கலாம் எனக் குறிப்பிடுவர்.

அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி தெற்கு என பத்தமேனி, இடைக்காடு, வளலாய் என்ற அயல் பகுதிகளையும் கொண்டமைந்துள்ளது. இங்கு விவசாயத்தைப் பின்னணியாகக் கொண்ட மக்களே அதிகம் வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் இந்து, கிறிஸ்தவ நெறிகளைப் பின்பற்றுபவர்களாகவும் உள்ளனர். சுவாமி ஞானப்பிரகாசர், பாவலர் தம்பிமுத்துப்பிள்ளை போன்ற பல பெரியார்களும் இக்கிராமத்திலேயே அவதரித்தனர்.

அச்சுவேலிக்கு அயலிலுள்ள முக்கிய கிராமங்களுள் ஆவரங்காலும் குறிப்பிடதக்க தொன்று.. இதுவும் பரந்த - பருத்தித்துறை பெரு வீதியிலே அமைந்துள்ளது. இது





அச்சுவேலியை வடக்கு எல்லையாகவும் புத்தூரை தெற்காகவும் நவக்கிரியை மேற்கு எல்லையாகவும் எல்லைப்படுத்திய வகையில் காணப்படுகின்றதுஆஸ்ரீவரம் ஸ்ரீகால் எனவும் ஆ பசு எனப் பிரிந்து பசு வரம் நிறையப் பெற்ற இடமெனப் பொருள்கொள்வர்.

அதாவது பசு இரண்டு கால்களில் நின்று இறைவனிடம் வரம் வாங்கிய இடமென்பதால், இப்பெயர் வந்ததாகவும் மக்கள் நம்புகின்றனர். அதற்கு ஏற்றாற்போல் நிறையப் பசுக்கள் இக்கிராமத்தில் காணப்படுகின்றன. ஆவரம் ஸ்ரீகால் எனவும் ஆஸ்ரீஅரங்குஸ்ரீஆல் எனப் பிரிந்து பசுக்கள் இளைப்பாறும் மேடுகள் நிறைந்த இடம் ஆகையால் இவ்விடத்திற்கு ஆவரங்கால் எனப் பெயர் தோன்றியிருக்க வாய்ப்புண்டு. இப்பகுதியில் வேளாண்மை தொழிலை பிரதானமாக செய்கின்ற மக்களே வசிக்கின்றனர். ஆதேகணம் பசுக்கள் புல் மேய்வதற்குரிய தரவைகளும் வயல்வெளிகளும் தோட்டத் தரைகளும் காணப்படுகின்றன. இங்கும் பெரும்பான்மையினராக இந்துக்களே வசிக்கின்றனர். ஆவரங்கால் சிவன் கோயில், நெல்லியோடை அம்மன் ஆலயம் உள்ளி வைரவர் ஆலயம் முதலான கோவில்களும் காணப்படுகின்றன.

கடந்த காலங்களில் நாட்டில் ஏற்பட்ட போர் அமைந்த காலங்களில் பெரும் பாதிப்பிற்கு உள்ளான பகுதியாகவும் பாதுகாப்புக் கருதி தஞ்சம் புகுகின்ற பகுதியாகவும் இப்பகுதி விளங்குவதற்கு இங்குள்ள புவியியல் கூறுகளே பிரதான பங்களிப்பை வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. கலை, கலாசாரம், உணவு என்ற நிலைகளில் தனித்துவமான மண்வாசனை உள்ள பகுதியாக அச்சுவேலி, ஆவரங்கால் கிராமங்களை அடையாளப்படுத்திக் காட்டலாம்.

# வாரப்பலன்

### மேடம்
தடைப்பட்ட விடயங்கள் கூடும், கோபத்தைக் கட்டுப்படுத்தவும், மனக்குழப்பம், சிந்தனைகள் அதிகரிக்கும், தொழிலில் நிதானம் தேவை, மின்சாதனங்கள் செலவு வைக்கும்.

**ஆஞ்சநேயரை வழிபடுங்கள்.**

### ரிஷபம்
வியாபாரம் சீராக இருக்கும், உறவினர்களின் உதவி கிடைக்கும், நிறை, குறைகள் உண்டு, ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும்.

**துர்க்கையை வழிபதுங்கள்.**

### மிதுனம்
வீண் செலவுகள், அலைச்சல் இருக்கும், பிறர் விடயங்களைத் தவிர்தல் நல்லது, வியாபாரம் கை கொடுக்கும். மாமியாரின் உடல் நலம் பாதிக்கப்படலாம்.

**அம்மனை வழிபடுங்கள்.**

### கடகம்
மனோ தைரியம் இருக்கும். கடன் தொகை வசூலாகும், குழந்தை பாக்கியம் கிட்டும், சொத்தக்கள் வாங்கும் யோகம் உண்டு, தொழில் சாதகமாக இருக்கும்.

**அம்மனை வழிபடுங்கள்.**

### சிம்மம்
செல்வாக்கு உயரும். சகோதரர்களிடையே புரிந்துணர்வு ஏற்படும், மனைவியை அனுசரித்துப் போகவும், கண் சம்பந்தமான உபாதைகள் வரலாம். பங்கு வர்த்தகத்தில் கவனம் தேவை.

**பெருமாளை வழிபடுங்கள்.**

### கன்னி
எதிர்பார்த்த பணம் கைக்கு வரும், சுப வைபவங்களுக்கு நாள் குறிப்பீர்கள், மகனுக்கு வேலை கிடைக்கும், வீட்டில் பராமரிப்புச் செலவுகள் ஏற்படும்.

**சிவபெருமானை வழிபடுங்கள்.**

### துலாம்
இல்லறம் இனிக்கும். பண உதவிகள் கிடைக்கும், பயணங்கள் இருக்கும், செலவுகள் கூடும். அரசாங்க விடயங்கள் சற்று தாமதமாகலாம்.

**விஷ்ணுவை வழிபடுங்கள்.**

### விருச்சிகம்
திடமாக முடிவு எடுப்பீர்கள், சொத்துப் பிரச்சினை நீங்கும், சுபச்செலவுகள் வரும், வியாபாரம் சீராக இருக்கும், வங்கி உதவிகள் கிடைக்கும்.

**சிவனை வழிபடுங்கள்.**

### தனுசு
எதிர்பார்த்த நற்செய்தி கிடைக்கும், அடைவில் உள்ள நகைகளை மீட்பீர்கள், கூட்டுத் தொழிலில் மாற்றங்கள் வரலாம், அலைச்சல், பயணங்கள் இருக்கும்.

**நடராஜரை வழிபடுங்கள்.**

### மகரம்
பொன், பொருள் சேர்க்கை உண்டு, உத்தியோகத்தில் நிறை, குறைகள் இருக்கும், அசதி, சோர்வு, குழப்பங்கள் இருக்கும், சக ஊழியர்களை அனுசரித்துச் செல்லவும்.

**உருத்திரனை வழியடுங்கள்.**

### கும்பம்
வங்கிக்கடன் கிடைக்கும், மருத்துவ செலவுகள் வந்து போகும், மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும், வியாபாரம் லாபகரமாக இருக்கும். நிதானம், கவனம் அவசியம்.

**முருகனை வழிபடுங்கள்.**

### மீனம்
கடன் வசூலாகும். மனைவியை அனுசரிப்பது அவசியம், சுபசெய்தி வரும், வாகனங்கள் வாங்கும் யோகம் உள்ளது.

**விநாயகரை வழிபடுங்கள்.**




கடந்த 14 ஆம் திகதி யாழ்ப்பாணம் வந்த ஜனாதிபதி மைத்திரி சிறிபாலசேன பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்றபோது...



சர்வதேச இந்து இளைஞர் பேரவை மற்றும் மன்னார் மாவட்ட அறநெறிப் பாடசாலைகளின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் மன்னாரில் நடைபெற்ற இந்துமாநாட்டின் போது...



இந்திய அணு விஞ்ஞானி ஏ.பி.ஜே. அப்துல் கலாமின் 86வது பிறந்த தின நிகழ்வு யாழ்.பொது நூலகத்தில் கடந்த 15ஆம் திகதி இடம்பெற்றவேளை...



வட்டுக்கோட்டைத் தொகுதிக்குட்பட்ட பல்கலைக்கழக மாணவர்களைக் கௌரவிப்பும், தொழில்பயிற்சி பெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் வட்டுக்கோட்டை தமிழ்த் தேசியக் கட்சி அலுவலகத்தில் கடந்த 5ஆம் திகதி இடம்பெற்றபோது...



வறுமை ஒழிப்புதினம் மற்றும் தீபாவளி தினத்தை முன்னிட்டு வவுனியா தமிழ் விருட்சம் சமூக அமைப்பு மற்றும் சாந்தநாயகி நற்பணி மன்றம் இணைந்து வவுனியாவில் உலர்உணவுப் பொருட்கள் வழங்கியபோது...



# குட்டீஸ்...!

puthuvithi@gmail.com

# உழைத்து வாழ வேண்டும்



சந்திரவனக் காடு மழையின்றி வறண்டு போனது. காடு வளம் பெறும் என்று காத்திருந்த முயலுக்கும் பச்சோந்திக்கும் நம்பிக்கை போய்விட்டது.

இரண்டும் உணவின்றித் தவித்தன. இனியும் இங்கே வாழ்க்கை நடத்த முடியாது என்று புரிந்துகொண்டன. எனவே வேறு செழிப்பான பகுதிக்குப் போய் வசிக்கலாம் என்று தீர்மானித்து, இரண்டும் புறப்பட்டன. வெகுதூரம் பயணித்த பிறகு வழியில் ஒரு குரங்கைச் சந்தித்தன.

முயலும் பச்சோந்தியும் குரங்கிடம் 'அண்ணா! நாங்கள் வசித்த பகுதி வறண்டு போய்விட்டது. செழிப்பான பகுதி ஏதேனும் அருகில் இருக்கிறதா?" என்று கேட்டன.

'சற்றுத் தொலைவில் செழிப்பான காடு இருக்கிறது. நான் அங்கேதான் வசிக்கிறேன். எங்கள் சிங்க ராஜா நன்றாக ஆட்சி நடத்துகிறார். அங்கே போய் நீங்கள் வசிக்கலாம்" என்றது குரங்கு.

முயலும் பச்சோந்தியும் குரங்கு சொன்ன காட்டுக்கு வந்து சேர்ந்தன. காடு செழிப்பாகவே இருந்தது. அப்போது சூரியன் மறைந்து இருட்டிவிட்டதால் அவை இரண்டும் ஒரு மரப்பொந்தில் தங்கின.

"நாம் இன்றிரவு இங்கே தங்கிக் கொள்ளலாம். நாளை முதல் இந்தக் காட்டிலேயே ஒரு வேலை தேடிக்கொண்டு நிரந்தரமாக வாழலாம்" என்றது முயல்.

மறுநாள் முயலும் பச்சோந்தியும் ஆளுக்கொரு திசையில் வேலை தேடிச் சென்றன. மாலை இரண்டும் மரப்பொந்துக்கு வந்தன. 'பச்சோந்தி, எனக்கு வேலை கிடைத்து விட்டது. மண்ணைத் தோண்டி கிழங்கு, கடலை எடுக்கும் வேலை" என்றது முயல்.

"அப்படியா! எனக்கு அரசவையில் அதிகாரியாக வேலை கிடைத்திருக்கிறது" என்று பொய் சொன்னது பச்சோந்தி. மறுநாளிலிருந்து முயல் வேலைக்குச் சென்றுவந்தது. பச்சோந்தி எங்கோ கிளம்பிச் சென்றது. அது எங்கே செல்கிறது என்று யாருக்கும் தெரியாது. இப்படியாக ஒரு மாதம் கழிந்தது.

ஒருநாள் கடலைக் காட்டில் முயல் வேலை செய்து கொண்டிருந்தது. அப்போது அங்கு வந்த குரங்கு, "அன்று உன்னுடன் வந்த பச்சோந்தியை மரத்தில் கட்டி வைத்திருக்கிறார்கள். என்ன நடந்தது என்று தெரியவில்லை. சிங்க ராஜா தண்டனை கொடுக்கக் காத்திருக்கிறார்" என்று சொன்னது.

அதைக் கேட்டு முயலுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

"என்ன, கட்டி வைத்திருக்கிறார்களா? அவன் என்ன தவறு செய்தான்?" என்று கேட்டவாறு, பச்சோந்தியைக் கட்டி வைத்திருக்கும் இடத்தை நோக்கி ஓடியது முயல்.

பச்சோந்தி தலை குனிந்தபடி நின்றிருந்தது.

முயல் நேராக சிங்க ராஜாவிடம் போய், "அரசே! இவன் என் நண்பன். இவன் என்ன தவறு செய்தான்?" என்று பணிவாகக் கேட்டது.

"ஓ... இவன் உன் நண்பன்தானா? இவன் கடந்த ஒரு மாதமாக நம் காட்டில் பலரும் உழைத்துச் சேகரித்து வைத்திருக்கும் உணவுகளைத் திருடி தின்று வந்திருக்கிறான். யாராலும் இவனைக் கண்டுபிடிக்க முடியவில்லை. காரணம் இவன் இடத்துக்குத் தகுந்தாற்போல தன் நிறத்தை மாற்றிவிடுகிறான். இன்று காய்ந்த இலைச் சருகுகளோடு சருகாக மறைந்து உணவைத் திருடி தின்று கொண்டிருந்தான். ஆனால் திடீரென்று அடித்த காற்றில் சருகுகள் பறந்து போய்விட்டன. இவன் மாட்டிக்கொண்டான். இவனுக்குக் கசையடி கொடுக்கப் போகிறேன்" என்றது சிங்கம்.

முயல் பச்சோந்தியைத் திரும்பிப் பார்த்தது.

"நண்பா, என்னை மன்னித்துவிடு. நான் ஒரு மாதமாக வேலைக்குப் போகவில்லை. என் உடலின் நிறத்தை மாற்றும் திறமையை வைத்து நான் உணவைத் திருடித் தின்றேன். நீதான் என்னைக் காப்பாற்ற வேண்டும்" என்று அழுதது பச்சோந்தி.


பச்சோந்தியின் மீது இரக்கம் கொண்ட முயல் சிங்கத்திடம், "அரசே! இவனை மன்னித்துவிடுங்கள். இனி இவன் திருட மாட்டான். ஏதேனும் இவனுக்கு வேலை கொடுங்கள் " என்று கேட்டது.

"நீ இங்கு வந்த ஒரு மாதத்திலேயே நல்ல உழைப்பாளி என்று தெரிந்து கொண்டேன். உனக்காகப் பச்சோந்தியை மன்னிக்கிறேன். இவன் நம் உளவுத்துறையில் பணிபுரியட்டும். எதிரிகளின் கண்ணில் படாமல் மறைந்திருந்து உளவு பார்த்து வரட்டும். ஒருவன் தனக்கு இருக்கும் திறமையை நல்வழியில் பயன்படுத்தினால் எப்போதும் பெயரும் புகழும் கிடைக்கும். தீய வழியில் பயன்படுத்தினால் தீமைதான் நடக்கும்" என்றது சிங்கம்.

பச்சோந்தியும் திருடுவதை விட்டுவிட்டு, உழைத்து வாழ ஆரம்பித்தது.


## வரிக்குதிரை சில தகவல்கள்


- குதிரையின் இனத்தைச் சேர்ந்த பாலூட்டி வகை விலங்கு.
- உடல் முழுவதும் கறுப்பு வெள்ளைக் கோடுகள் உள்ளன. இதுவே வரிக்குதிரை என அழைக்கப்படக் காரணம்.
- சமவெளி வரிக்குதிரை, மலைவாழ் வரிக்குதிரை, க்ரீவிஸ் வரிக்குதிரை என மூன்றுவகை வரிக்குதிரைகள் காணப்படுகின்றன.
- சாதாரணமாக 1.2 -1.3 மீற்றர் உயரமும் 350 கிலோ எடை கொண்டவையாகவும் இவை இருக்கும்.
- வரிக்குதிரைகளின் பார்வைத் திறன் அதி சக்தி வாய்ந்தது.
- வரிக்குதிரைகளால் காதுகளை எந்த திசைக்கும் திருப்ப முடியும். கேட்டல் திறனும் அதி சக்தி வாய்ந்தது.
- ஒரு வரிக்குதிரைக்கு இருக்கும் கோடுகள் போன்று மற்றைய வரிக்குதிரைக்கு இருப்பதில்லை.
- மணிக்கு 55 கிலோமீற்றர் வேகத்தில் ஓடும் சக்தி வாய்ந்த வரிக்குதிரைகள் ஒருநாளில் 80 கிலோமீற்றரை நடந்து கடந்துவிடும்.
- வரிக்குதிரைகள் மந்தையாக (கூட்டமாக) வாழும் இயல்பைக் கொண்டவை.





## உங்களுக்குத் தெரியுமா...?

- பண்டா கரடியின் பிரதான உணவு - மூங்கில்
- புலி தாக்க அஞ்சும் ஒரே விலங்கு - காட்டு எருமை
- முள்ளம்பன்றிகள் விரும்பி உண்ணும் உணவு - மானின் உதிர்ந்த கொம்பு
- எதிரி அச்சுறுத்தினால் மயங்கி விழும் உயிரினம் - அப்போசம் எனும் ஒரு வகை எலி
- மிக மெதுவாக இயங்கும் பாலூட்டி - தேவாங்கு
- எலும்புக் கூடு இல்லாத விலங்கு - ஜெல்லி மீன்
- ஒரேயொரு ரயில் நிலையம் மட்டும் உள்ள நாடு - சிங்கப்பூர்
- கத்தரிக்கோலை கண்டுபிடித்தவர் - லியானாடோ டாவின்சி
- கரையே இல்லாத கடல் - அமெரிக்காவின் சர்க்கோஸ்
- பூக்களுக்கு நிறத்தைக் கொடுக்கும் வேதியல் - அந்தோசயன்
- 'வேர்களின் ரோஜா" என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்படுவது - வெங்காயம்









# நந்திதேவரின் கதை

அடிலகன் என்ற சிவபக்தன் பூலோக வாழ்வை முடித்து விட்டு கைலாயம் சென்றான். அந்தச் சமயம் பார்வதி தேவி சிவனை தியானித்துக் கொண்டிருந்தாள். வெளியே நந்திதேவர் காவல் காத்துக் கொண்டிருந்தார்.

சிவபார்வதியின் தரிசனம் பெற வேண்டும் என விரும்பிய பக்தனான அடிலகன், நந்திதேவரையும் மீறி அம்பிகை இருக்கும் இடத்தைச் சென்றான். அவரைக் கண்ட மகிழ்ச்சியில் சத்தம் போட்டு வணங்கினான். பக்தனின் குரல் கேட்ட, அம்பிகை தியானம் கலைந்து எழுந்தாள். நந்தியின் காவலையும் மீறி தன் இருப்பிடத்தில் அடிலகன் நிற்பதைக் கண்ட அம்பிகை 'ஏ... நந்தீசா..! யாரைக் கேட்டு இவனை உள்ளே அனுமதித்தாய்..? என்று கோபத்துடன் சத்தமிட்டார்.

நந்தி, 'தாயே தங்கள் பக்தன் என்பதால்தான் அனுமதித்தேன். நீங்கள் பூசை முடித்த பின்னர்தான் அவனை அனுப்பியிருக்க வேண்டும் தவறாக நடந்துவிட்டேன் மன்னியுங்கள்" என்றார். அங்கு வந்த சிவன், பணியில் தவறிய நந்திதேவரை பூலோகத்தில் மானிடராகப் பிறக்கும்படி செய்துவிட்டார்.

இந்நிலையில், சிலாதர் என்ற முனவர் குழந்தைப் பேறு இன்மையால் வருந்தினார். அவரின் ஆசிரமத்துக்கு சென்ற சப்தரிஷிகள் குழந்தை இல்லாத வீட்டில் துறவிகள் உண்ணக்கூடாது என அவரின் விருந்தோம்பலை மறுத்து சென்றுவிட்டனர். இதனால் அவரின் வருத்தம் மேலும் அதிகரித்தது. இதனால் அந்தத் தம்பதியர் சிவனையும் பார்வதி தேவியையும் மனமுருகிப் பிரார்த்தனை செய்தனர். இந்த வேளையில்தான் சிவபெருமான் நந்திதேவருக்கு சாபமளித்தார். சாபத்தால் குழந்தையான நந்திதேவரை பெட்டி ஒன்றில் வைத்து சிலாதர் முனிவரின் ஆசிரமத்தின் அருகே தேவகணங்கள் வைத்துச் சென்றன. சிலாத முனிவரின் கண்களில் அப்பெட்டி பட்டது. திறந்து பார்த்தார். மனித உடலும், காளையின் முகமும் கொண்ட அழகிய குழந்தை அதற்குள் இருந்தது. குழந்தையில்லாத தனக்கு இறைவனே அக்குழந்தையைத் தந்தார் என முனிவர் மகிழ்ந்தார்.

'பிள்ளையில்லாத எனக்கு, நற்தோற்றம் கொண்ட குழந்தையை அளித்திருக்கக்கூடாதா. காளை முகம் கொண்ட குழந்தையை ஊரார் ஏற்பார்களா என எண்ணி இறைவனை மனமுருகிப் பிரார்த்தனை செய்தார்.

அந்நேரத்தில் 'சிலாதா வந்திருப்பவன் யாரோ அல்ல. என் காவலனான நந்திதேவர், அவனுக்கு அழகான முகம் தருகிறேன். ஆனால் அவன் பன்னிரண்டு ஆண்டுகளே பூலோகத்தில் வாழ்வான். ஒரு சாபத்தால் உன்னிடம் வந்து சேர்ந்துள்ளான். அவனை வளர்க்க வேண்டியது என் பொறுப்பு என அசரீரி ஒலித்தது. குழந்தையும் அழகான மனித முகத்தைப் பெற்றது.

பன்னிரண்டு ஆண்டுகளே தங்களோடு வாழ்வான் என்ற போதிலும், தங்களை கைலாயத்துக்கு அழைத்துச் செல்லப் போகும் பிள்ளை என்பதால், ரிஷி தம்பதியர் மகிழ்ந்தனர். அன்போடு குழந்தையை வளர்த்து வந்தனர். அக்குழந்தை சிவலோகப் பிள்ளை என்பதால், அவனைப் பார்த்ததும் மக்களின் நோய்கள் நீங்கின. சிலர் அவனைக் கடவுளாகவே பாவித்து வணங்கி முக்திப் பேறு வேண்டினர். பிதோஷ வேளையில் சிவ தியானத்தில் அமர்ந்துவிடுவான் அக்குழந்தை. பக்தர்களும் அவனுடன் இணைந்து சிவனைத் தியானிப்பர்.

அவன் கண் மூடித் தியானிக்கும் போது நெற்றியின் நடுவில் சிவதரிசனம் காட்டினான். இதனால் தங்களுக்குப் பிறப்பற்ற நிலை கிடைக்கும் என மக்கள் எண்ணினர்.

பல அற்புதங்களை பூலோகத்தில் நடத்திய நந்திதேவர், 12 வயதில் சாபம் நீங்கி, பூலோக வாழ்வை முடித்துக் கொண்டு கைலாயம் சென்றார். அச்சமயம் தன் பெற்றோரையும் கைலாயத்துக்கு அழைத்துச் சென்றார். சிவன், பார்வதி முன்னிலையில் மண்டியிட்டு தன் தவறுக்கு மன்னிப்புக் கேட்ட நந்திதேவர் மீண்டும் தன் காவல் கடமையைப் பொறுப்பேற்றார்.

நந்திதேவர் பிரதோஷ நாள்களில் சிவனைத் தியானித்து சாபத்தில் இருந்து விடுதலையானார். பிரதோஷ நாள்களில் சிவனைத் தியானித்து அவரின் அனுக்கிரகத்தைப் பெற்று, மோட்சம் அடைவோம்.

# திரும்பிப் பார்க்காதவன்

ஜென் குரு குடோ, பேரரசரின் குருவாக நாடெங்கும் புகழ் பெற்றிருந்தார். ஆனால், அவர் ஒரு யாசகரைப் போல ஊர் ஊராகச் சுற்றியலைந்தார். எடோ நகரம் நோக்கிய பயணத்தில் ஒரு நாள் டகினக்கா எனும் சிறு கிராமத்தை வந்தடைந்தார். அந்தி மங்கும் வேளையில் மழை கொட்டித் தீர்த்தது. குடோ முழுதாக நனைந்து விட்டார். அவர் அணிந்திருந்த வைக்கோற் காலணிகள் ஈரத்தில் நைந்து போய்விட்டன. ஒரு பண்ணை வீட்டுத் தாழ்வாரத்தில் காய்ந்த காலணி ஜோடி ஒன்றைக் கண்டார்.

அந்த வீட்டில் வசித்த குடும்பத் தலைவி, குடோ விரும்பிய காலணியை அவருக்குக் கொடுத்துவிட்டு, ஈர உடுப்புகளோடு பிரயாணம் செய்ய வேண்டாமென்றும், அன்று இரவு, தங்கள் வீட்டின் தாழ்வாரத்திலேயே தங்கி ஓய்வெடுத்துச் செல்லலாம் என்றும் கேட்டுக்கொண்டாள். அவளது வேண்டுகோளை ஏற்று குடோ தங்க சம்மதித்தார்.

உறங்கச் செல்வதற்கு முன்னர் வீட்டிலிருந்த குழந்தைகளுடன் பேசிப் பொழுதைப் போக்கினார். வீட்டில் அனைவரின் முகத்திலும் வாட்டம் தொக்கி நிற்பதைக் கண்டு அவர்களிடம் காரணம் கேட்டார். குடும்பத் தலைவி தனது கணவன் பற்றிப் பேசத் தொடங்கினாள்: "அவர் பெரும் குடிகாரர். சூதாடி. சூதாட்டத்தில் அவர் வென்று விட்டால், அவர் நடந்து கொள்வதைச் சகித்துக்கொள்ளவே முடியாது. ஒரு வேளை தோற்றால் அதிக கடன் வாங்கி மீண்டும் விளையாடுவார். சில தினங்கள் மூக்குமுட்டக் குடித்துவிட்டு எங்காவது சாலையில் கிடப்பார். என் கணவரால் நாங்கள் நிம்மதியிழந்து நிற்கிறோம்".

குடோ, தன்னிடமிருந்த கொஞ்சப் பணத்தைக் குடும்பத் தலைவியிடம் கொடுத்து திராட்சை மதுவும் உணவும் வாங்கிவரச் சொன்னார். எந்தக் கவலையும் வேண்டாமென்று அந்தக் குடும்பத் தலைவிக்கு ஆறுதல் கூறி அவர்களை உறங்கச் செல்லுமாறு கூறினார். நடுநிசியில் அந்த வீட்டின் தலைவர் போதையில் தள்ளாடி தன் வீட்டுச் கதவின் முன் நின்றார். போதையில் தடுமாறி தன் மனைவியை அழைத்தார். தாழ்வாரத்தில் தியானித்துக் கொண்டிருந்த குடோ, "நான் உங்களுக்கு சாப்பிட மதுவும் மீன் உணவும் வைத்திருக்கிறேன். நீங்கள் இதை உண்ணலாம்" என்றார். அவன் களிப்போடு திராட்சை மதுவை எடுத்து ஒரே மிடறில் விழுங்கிவிட்டு தரையில் சரிந்து சயனத்தில் ஆழ்ந்தான். குடோ அவனருகே அமர்ந்து தியானத்தைத் தொடர்ந்தார்.

காலை வெகுநேரம் கழித்து குடும்பத் தலைவன் கண் விழித்தான். அருகில் ஏகாந்தமாக அமர்ந்திருந்த குருவைப் பார்த்து. 'யார் நீ. என் வீட்டுக்கு எப்படி வந்தாய்?" என்று கேட்டான். பதிலுக்கு குரு, "நான் கியோட்டோவைச் சேர்ந்த குடோ. எடோ நகரை நோக்கி யாத்திரை மேற்கொண்டிருக்கிறேன்" என்றார்.

அவன் வெட்கத்தில் கூனிக்குறுகிப் போனான். பேரரசரின் குரு என்பதை அறிந்து தன் நடத்தைக்காக பணிவோடு மன்னிப்புக் கேட்டான்.

அதற்கு குரு, "பூமியில் வாழ்க்கை மிகவும் நிலையற்றது. எதையும் பயனுள்ளதாகச் சாதிக்காமல் சூதாட்டத்திலும் போதையிலும் கழித்தால் உன் குடும்பம்தான் பாதிக்கப்படும்" என்றார்.

குரு எடோவின் உபதேசத்தால் ஞானம் பெற்ற கணவன், "தாங்கள் சொன்னது மிகவும் சரி. உங்களுக்கு மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன். நீங்கள் செல்லும் வழியில் சிறிது தூரம் உங்கள் உடைமைகளைச் சுமந்து வர அனுமதி தரவேண்டும்" என்றான். குடோ ஒப்புக்கொண்டார்.

இருவரும் வீட்டிலிருந்து புறப்பட்டு ஐந்து மைல்கள் கடந்தவுடன் குடோ அவனை வீடு திரும்பச் சொன்னார். "இன்னும் ஐந்து மைல்கள் கடந்த பிறகு திரும்பி விடுகிறேன்" என்றான் அவன். இருவரும் தொடர்ந்தனர்.

குரு, "இப்போது நீ திரும்பலாம்" என்றார்.

"இன்னும் ஒரு பத்து மைல் தூரம் உங்களோடு வருகிறேன்" என்றான் அவன்.

பத்து மைல் தூரம் கடந்த பிறகு குரு அவனை வீடு திரும்பச் சொன்னார். போக மறுத்தவன், "இனி என் வாழ்க்கை முழுவதையும் உங்களை பின்தொடர்வதற்காகவே அர்ப்பணிக்கிறேன்" என்று அறிவித்தான்.

நவீன ஜென் குருக்கள் அனைவரும் ஆசான் குடோவின் அந்த வாரிசிடமிருந்தே பின்னர் தலையெடுத்தனர். அவர் பெயர் மு-நான். அதன் பொருள் திரும்பிப் பார்க்காதவன்.

# புதுவிதி PUTHU VITHI நடத்தும்

# பரிசு மழை போட்டி - 01 -

**1ம் பரிசு ரூ100,000/=**

**2ம் பரிசு ரூ60,000/=**

**3ம் பரிசு ரூ25,000/=**

**இத்துடன் ரூ2000/= பெறுமதியான 10 ஆறுதல் பரிசுகள்**

வாசகர்கள் தங்கள் அறிவையும், அதிர்ஷ்டத்தையும் பரீட்சித்துப் பார்க்க ஓர் அரிய சந்தர்ப்பம்

**மேற்படி போட்டிகள் மூன்று சுற்றுக்களாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள கால அட்டவணையின்படி நடைபெறும்.**

புதுவிதி PUTHU VITHI பரிசு மழை



## முதலாம் சுற்று

- முதலாம் சுற்றின் முதலாம் பரிசுக்குரிய வினாக்கள் பிரசுரமாகும் திகதி **28.10.2017**
- முதலாம் சுற்றின் இரண்டாம் பரிசுக்குரிய வினாக்கள் பிரசுரமாகும் திகதி **04.11.2017**
- முதலாம் சுற்றின் மூன்றாம் பரிசுக்குரிய வினாக்கள் பிரசுரமாகும் திகதி **11.11.2017**
- முதலாம் சுற்றின் ஆறுதல் பரிசுக்குரிய 10 வினாக்கள் பிரசுரமாகும் திகதி **18.11.2017**

## இரண்டாம் சுற்று

- இரண்டாம் சுற்றின் முதலாம் பரிசுக்குரிய வினாக்கள் பிரசுரமாகும் திகதி **25.11.2017**
- இரண்டாம் சுற்றின் இரண்டாம் பரிசுக்குரிய வினாக்கள் பிரசுரமாகும் திகதி **02.12.2017**
- இரண்டாம் சுற்றின் மூன்றாம் பரிசுக்குரிய வினாக்கள் பிரசுரமாகும் திகதி **09.12.2017**
- இரண்டாம் சுற்றின் ஆறுதல் பரிசுக்குரிய வினாக்களும், இறுதிச்சுற்றில் முதலாம் பரிசுக்குரிய போட்டியில் பங்குகொள்ள தகுதியானவர்களின் பெயர்களும் பிரசுரமாகும் திகதி **16.12.2017**

## இறுதிச் சுற்று

- இறுதிச் சுற்றின் முதலாம் பரிசுக்குரிய வினாக்களும், இறுதிச் சுற்றின் இரண்டாம் பரிசுக்குரிய போட்டியில் பங்குகொள்ள தகுதியானவர்களின் பெயர்களும் பிரசுரமாகும் திகதி **23.12.2017**
- இறுதிச் சுற்றின் இரண்டாம் பரிசுக்குரிய வினாக்களும், இறுதிச் சுற்றின் மூன்றாம் பரிசுக்குரிய போட்டியில் பங்குகொள்ள தகுதியானவர்களின் பெயர்களும் பிரசுரமாகும் திகதி **30.12.2017**
- இறுதிச் சுற்றின் மூன்றாம் பரிசுக்குரிய வினாக்களும், இறுதிச் சுற்றில் ஆறுதல் பரிசுக்குரிய போட்டியில் பங்குகொள்ள தகுதியானவர்களின் பெயர்களும் பிரசுரமாகும் திகதி **06.01.2018**
- இறுதிச் சுற்றின் ஆறுதல் பரிசுக்குரிய வினாக்கள் வினாக்கள் பிரசுரமாகும் திகதி **13.01.2018**

- சகல போட்டிகளிலும் இறுதிச்சுற்றில் பங்குபற்றி குலுக்கலுக்கு தகுதிபெற்றவர்களின் பெயர்கள் பிரசுரமாகும் திகதி **20,27.01.2018**

**குலுக்கல் இடம்பெற்று பரிசுகள் வழங்கப்படும் திகதி 15.01.2018**

**நிபந்தனைகள்:-**

- ✓ ஒருவர் ஒரு போட்டியில் ஒரு முறைதான் பங்குபற்றலாம்
- ✓ எமது பத்திரிகையில் பிரசுரமாகும் போட்டிக் கூப்பனையே நிரப்பி அனுப்ப வேண்டும். போட்டியாளர்கள் தாமே தயாரித்து அனுப்புவதை தவிர்க்க வேண்டும்.
- ✓ போட்டியாளர்கள் விண்ணப்பத்தில் தாம் குறிப்பிட்ட ஆள்அடையாள விவரத்தை அவர்கள் பரிசிலுக்கு தகுதி பெறும் பட்சத்தில் நேரடியாக சமர்ப்பித்து உறுதிப்படுத்த வேண்டும். இல்லையெனில் பரிசில் பெறும் வாய்ப்பை தவற விட்டவராவார்.
- ✓ எமது பத்திரிகை நிறுவனத்தைச் சார்ந்தவர்களோ அல்லது அவர்களது உறவினர்களோ இப் போட்டியில் பங்குகொள்ள முடியாது.

# உங்கள் புதுவிதியில்

## விரைவில்...

நா.யோகேந்திரநாதனின்

## "நீந்திக் கடந்த நெருப்பாறு"




(அகில இலங்கை ரீதியாக நடத்தப்பட்ட நாவல் இலக்கியப் போட்டியில் தேசிய விருதுக்கு தெரிவான, வட மாகாண கலாசார அவையால் நடத்தப்பட்ட நாவல் இலக்கியப் போட்டியில் சிறந்த நாவலுக்கான விருதுகளைப் பெற்ற நாவல்)

எமது உன்னத போராட்டத்தின் இறுதி அத்தியாயங்களை எழுதிய வன்னி இறுதிப் போர் களத்தை கண்முன் நிறுத்தும் கதை...

**மிக விரைவில்...! படிக்கத் தவறாதீர்கள்...!!**



புதுவிதி
PUTHU VITHI



இன்

## பரிசு மழையில்

நனையத் தயாராகுங்கள்

## ரூ 200,000/= இற்கும்

## அதிகமான பணப் பரிசை


வெல்வதற்கான

## அரிய சந்தர்ப்பம்

மேலதிக விவரங்களை அறிய:

இன்றே புதுவிதி வார இதழை

வாங்கிப் படியுங்கள்



சிறுகதை

- காவலூர் எஸ்.ஜெகநாதன் -

# ஆத்மாவின் கீதம்

'சத்திய மேடையில் உத்தமன் பாடிடும்......'
கசங்கிய அந்தக்கடதாசியில் எழுதப் பட்ட பாடல் வரிகளை என்னுள் முணுமுணுத்துப் பார்த்தேன். நெஞ்சத்துள் ஒரு இன்ப உணர்வு நெருடியது. வெளியாக இருந்த அந்தக் தரையில் நின்று உரத்துப் பாடினேன். பிசிறின்றி ராகத்துடன் ஒலித்தது என்குரல். வீட்டுக்குள் ஓடினேன். விறாந்தையில் இருந்து அப்பா தேவாரம் பாடிக் கொண்டிருந்தார். 'அப்பா நான் ஒரு பாட்டு எழுதியிருக்கேனப்பா....' என்றேன் ஆவலுடன்.

'பன்னிரண்டு வயது முடியேல்லை அவருக்கொரு பாட்டு' அப்பா மீண்டும் தேவாரம் பாடுவதில் மூழ்கிவிட்டார். அவர் பாடிக் கொண்டிருக்கிற பாட்டு மட்டும் என்னவாம். ஞானசம்பந்தர் மூனே வயசிலை பாடினது தானே, மீண்டும் 'என் பாட்டைக் கேளுங்கப்பா....? என்றேன்.

'இவனோட பெரிய தொல்லை' என்று சலித்தபடியே அப்பா எழுந்து உள்ளறைக்குள் சென்றுவிட்டார்.

என் மனம் வெகுவாக கசந்துவிட்டது. அந்தப் பாடல் எழுதப்பட்ட கடதாசியைக் குனிந்து பார்த்தேன். கண்ணீர்த்துளிகள் தான் அதில் பறந்து விழுந்தன. மறுகணமே ஒரு நினைப்பில் கீறல் என் மனதைத் தாக்கியது. அம்மா நிச்சயமா என் பாட்டைப் பாராட்டுவாள். மகனுடைய செயலைத் எந்தத் தாய்தான் பாராட்ட மாட்டாள். ஆவலுடன் துள்ளிக் குதித்தபடியே குசினிக்குள் ஓடினேன். அம்மா பால் காய்ச்சிக் கொண்டிருந்தார் அம்மாவின் அருகில் அமர்ந்தபடி முகத்தை ஏறிட்டுப் பார்த்தேன். அம்மாவின் முகத்தில் கருணை கசிந்து கொண்டிருந்தது.
'நான் ஒரு பாட்டு எழுதியிருக் கேனம்மா" என்றபோது அம்மா சிரித்தாள். நிச்சயமாக அது ஏளனம் செய்கின்ற சிரிப்பாக இராது என்ற 'நம்பிக்கை'யில் திருப்திபட்டவனாக தொண்டையைச் செருமினேன். மூச்சை உள்வாங்கி இழுத்துக் கொண்டு உரத்த குரலில் பாடத் தொடங்கினேன். அப்பாவுக்கும் கேட்கவேண்டும், அவர் பாடிக் கொண்டிருக்கும் தேவாரத்தை மீறி அவரது மனதைத் தொட வேண்டும் என்ற வெறி எனக்குள் மூழ்கியிருந்தது.

அம்மா சிரிப்பதைப் பார்ப்பதற்காக இடையில் கண்ணை மெல்லத் திறந்தேன். அம்மா குசினியை விட்டுப் போய்க்கொண்டிருந்தாள்.

'சீனியை எடுத்திட்டு வாறன்ரா' என்ற அம்மாவின் குரல் என் காதுக்குள் விருப்பமின்றியே நுழைந்தது.

அடுப்பிலிருந்த பானையில் பொங்கிக்கொண்டிருந்த பால் உள்வாங்கியது போலவே என் மனதிலும் பிரவேசித்து வந்த இனிய உணர்வ உள்வாங்கியது. அந்தப் பாடலை என்மனதுள் முணுமுணுத்தேன்.
என் இதயப்பரப்பில் அந்த உத்தமரின் நினைவைப் போலவே அந்தப்பாடல் வரிகளும் அழிக்கமுடியாத ஓவியமாகப் பதிந்து விட்டது. மேல் வகுப்புப் படித்துக் கொண்டிருந்தபோது ஒரு முறை விடுமுறையில் உல்லாசப்பயணம் போனோம். பஸ்சில் போய்க் கொண்டிருந்தபோது எல்லோரும் தனித்தனியாகப் பாட்டுப் பாடினார்கள். என் முறையும் வந்தது. 'எல்லோரும் அமைதியாக கேளுங்க.... இந்தியாவிலே சுதந்திரம் பெற்றுக்குடுக்க ஒரு காந்தி பிறந்தாரில்லையா அது போலவே நமக்கும் சுதந்திரம் பெற்றுக் கொடுப்பதற்கென்றே பிறந்த உத்தமருடைய தத்துவத்தைப் பற்றிய பாடல் இது' என்றேன். எல்லோரும் வியப்புடன் என்னையே பார்த்தார்கள். நான் என்னை மறந்து பாடத்தொடங்கினேன்.
'சத்திய மேடையில்........' குறுக்கிட்ட சிரிப்பொலிகளைக் கேட்டு நிமிர்ந்து பார்த்தேன். 'டேய்.... ஒரு சினிமாப்பாட்டுப் பாடடா' என்று பக்கத்தில் இருப்பவன் கூறினான். என் நெஞ்சம் வேதனையில் கசந்தது.

நாட்கள் நகர்ந்தன. எனக்கும் திருமணம் முடிந்துவிட்டது. முதலிரவன்று மனைவியின் வரவுக்காக கட்டிலில் காத்திருந்தேன். அவளும் அருகே வந்து அமர்ந்தாள். அருகணைத்து இருத்தியபடியே 'நான் ஒரு பாட்டுப்பாடட்டுமா' என்றேன். இலக்கியக் கூட்டத்தின் பின்னர் கச்சேரி வைக்கும் போது அந்தக் கச்சேரியை ரசிப்பதற்காக இலக்கியக் கூட்டத்தை சகித்துக் கொண்டிருப்பார்களே.... அதுபோலாவது என்பாட்டை அவள் ரசிக்க மாட்டாளா என்ற நினைப்பில் செருமிக்கொண்டே பாடத்தொடங்கினேன். குறுக்கிட்டவள் 'சினிமாப் பாட்டுங்களா' என்று ஆவலுடன் கேட்டாள். 'இல்லையடி இலட்சிய முனைப்பில் இதய சுத்தியுடன் நமக்காகப் பாடுபட்டுக் கொண்டிருக்கும் தலைவரின் தத்துவத்தைப்பற்றியது' என்றுவிட்டுப் பாடத் தொடங்கினேன்.

'சத்திய மேடையில் உத்தமன் பாடிய தத்துவமானது எத்தனை ஆண்டுகள்' குறுக்கிட்ட குறட்டைச் சத்தம் கேட்டு பாட்டை நிறுத்தினேன். மடியில் தலைவைத்து உறங்கிவிட்டாள் என் மனைவி.

என் மனைவியும் இறந்து பல வருடங்கள் கழிந்துவிட்டன. நோயும் என்னைப் பீடித்துக் கொண்டது. நானும் எவ்வளவு மாறிவிட்டேன். உருக்குலைந்துவிட்ட உடலை சரித்துக்கொண்டேன். தாகம் நெஞ்சை வாட்டியது. எவ்வளவு நேரம் இப்படிக் கிடப்பேனோ தெரியவில்லை. 'தாத்தா...' என்று ஒலித்த மழலைக்குரல். திடுக்கிட்டு எழுந்து பார்த்தால், ஒரு குழந்தை சிரித்தபடி மலர்ந்த முகத்துடன் நின்றது.

'பாப்பா... கொஞ்ச தண்ணீர் தருவியா' என்று கேட்டேன். உள்ளே சென்ற குழந்தை சில நிமிடங்களின் பின் நீருடன் வந்தது. ஆத்மா குளிர்ந்தது. வீதியால் சென்று கொண்டிருந்த இருவர் கதைத்துக்கொண்டு போவது கேட்கிறது.

'நம்ம தலைவர் நாடாளுமன்றத்திலை சுதந்திரப்பிரகடனம் கொண்டுவரப் போகிறார்." உத்தமரின் முகம் என் மனக்கண்களில் தோன்றியது. என் ஆத்மாவின் கீதம் அந்தப்பாடல் வரிகளை உரத்துப் பாடிவிட்டு கண்களைத் திறந்துகொண்ட போது சிரித்தபடி கைகளை ஆட்டிரசித்துக் கொண்டிருந்தது குழந்தை. நான் இறகு விரித்து வானில் பறந்தேன். குழந்தை தன் தாயைக் கையில் பிடித்துக்கொண்டு வெளியே அழைத்து வந்தது. 'நீங்களும் வாருங்களேன்' என்று அவள் குரலைத்தொடர்ந்து கணவனும் வெளியே வந்தான். வீதியில் போனவர்கள் கூடிவிட்டார்கள். எல்லோரும் பாடலில் லயம் தவறாது கையால் தாளமிட்டுக் கொண்டிருந்தனர். என் பாடல் அரங்கேறிவிட்டது. நான் என்னை மறந்துவிட்டேன். என் ஆத்மாவின் கீதம் காற்றில் கலந்துகொண்டிருந்தது.

'சத்திய மேடையில் உத்தமன் பாடிடும் தத்துவமானது எத்தனை ஆண்டுகள் செத்துவிட்டாலும் நித்தியமானது'

என்னைச் சூழநின்ற எல்லோரும் தம்மை மறந்து பாடலில் மூழ்கிவிட்டார்கள். நான்...? என் கண்கள் இருண்டன. பசிக்களைப்பில் உடல் சுருண்டது. என் உடலைவிட்டுப் போகத் துடித்த என் உயிர் போகாமலேயே நின்றது அந்த உத்தமரை நினைத்து. நாலே வரிகள் பாடியதாலேயே என் உயிர் காப்பாற்றப்பட்ட தென்றால் அந்த உத்தமர் நித்தியமானவர்.




# 5 மணி நேரக் காத்திருப்பு...! ஒரு தேநீருக்காக...!!





சீனாவில் ஒரு கோப்பை தேநீருக்காக ஆயிரக்கணக்கான மக்கள் 5 மணி நேரம் கூட வரிசையில் காத்திருக்கிறார்கள்! சாதாரண ஐஸ் ரீயின் மீது சீஸைச் சேர்த்துக் கொடுத்தால் அது 'ஹே ரீ'. சீனா முழுவதுமே ஹே ரீ சுவையில் மக்கள் மயங்கிக் கிடக்கிறார்கள். தேநீர் பற்றிய அடிப்படை விடயங்கள் கூடத் தெரியாத 21 வயது இளைஞர்தான் இந்த சீஸ் ரீயை உருவாக்கியவர்!

சில மாதங்களுக்கு முன்பு வரை ஜியாங்மென் பகுதியிலுள்ள சிறிய தெருவில், ஓர் ஆள் நிற்கும் அளவுக்கான கடையில்தான் இந்த சீஸ் ரீ விற்பனை நடந்து கொண்டிருந்தது. இன்று குவாங்டோங் மாகாணத்தில் மட்டுமே 50 கிளைகள் இருக்கின்றன! ஒவ்வொரு கடையிலும் குறைந்தது 2 மணி நேரம் ஒரு கோப்பை தேநீருக்காக மக்கள் காத்திருக்கிறார்கள். ஒரு சில இடங்களில் 5 மணி நேரம் கூட பொறுமையுடன் காத்திருந்து, தேநீரைப் பருகுகிறார்கள். "கோங் சா என்ற தேநீரைப் பார்த்துதான் நான் சீஸ் ரீயை உருவாக்கினேன். கோங் சா தேநீரில் கிறிம் வைத்துக் கொடுப்பார்கள். சில காலம் இது பிரபலமாக இருந்தது. இன்று என்னுடைய சீஸ் ரீ மக்களின் விருப்பமாக மாறிவிட்டது.

2012 ஆம் ஆண்டில் ஒரு சிறிய ரீ கடையை ஆரம்பித்தேன். வியாபாரமே இல்லை. ஆனாலும் நம்பிக்கையைக் கைவிடவில்லை. கடையை மூடிவிட்டு, என்ன செய்யலாம் என்று யோசித்தேன். பல முயற்சிகளை மேற்கொண்டேன். எல்லாவற்றிலும் தோல்வி. இறுதியில் சீஸ் ரீயை அறிமுகம் செய்தேன். இவ்வளவு பெரிய வெற்றி கிடைக்கும் என்று நானே எதிர்பார்க்கவில்லை. இந்த வெற்றியில் கணிசமான பங்கு சமூக ஊடகங்களுக்குதான். நான் ஆரம்பத்தில் விளம்பரம் செய்யவே இல்லை.

இதைப் பருகியவர்கள் நல்லவிதமான கருத்துகளைப் பரப்பிவிட்டனர். இன்றும் காத்திருந்து சீஸ் ரீ வாங்கியதும் உடனே பருகுவதில்லை. ஒளிப்படம் எடுத்து, ஃபேஸ்புக்கில் போட்டுவிட்டுதான் குடிக்கிறார்கள். ஒரு கோப்பை ரீ தயாரித்துக் கொடுக்க 1 நிமிடம்தான் ஆகும். ஒரு மணி நேரத்தில் 360 கோப்பைகளை வழங்குகிறோம். ஆனாலும் காத்திருக்கும் நேரத்தைக் குறைக்க முடியவில்லை. அவ்வளவு மக்கள் படை எடுக்கிறார்கள். இதைச் சமாளிக்க பல இடங்களில் கிளைகள் ஆரம்பித்துவிட்டோம். ஆனாலும் பிரச்சினை தீரவில்லை. கூட்டம் அலை மோதுகிறது. விரைவில் சீனா முழுவதும் கிளைகளைத் திறக்க இருக்கிறோம். 150 ரூபாய் முதல் 600 ரூபாய் வரை பல சுவைகளில் விற்பனை செய்துவருகிறோம். பால் கலக்காத தேநீரில் லேசான கசப்புச் சுவை இருக்கும். பாலாடைக் கட்டியைச் சேர்க்கும்போது கசப்புச் சுவை மறைந்துவிடுகிறது. இனிப்பு அதிகமாகத் தெரிகிறது. இதுதான் இந்தத் தேநீரை மக்கள் விரும்புவதற்குக் காரணமாக இருக்கும் என்று நினைக்கிறேன். மக்களின் கருத்துக்களை மிகவும் நெருக்கமாகக் கவனித்து வருகிறேன். அவர்களுக்குப் பிடிக்காத விடயங்களை உடனுக்குடன் சரி செய்துவிடுவேன். கருவுற்றிருக்கும் பெண்கள் கூட வரிசையில் காத்திருப்பதைக் கண்டதும், அவர்களுக்கு வரிசையில் இருந்து விலக்கு அளித்தேன். ஆனால் அவர்கள் 2 கோப்பைகளுக்கு மேல் வாங்க முடியாது" என்கிறார் யுன்சென் நை.





# கட்டடத்தையும் நகல் எடுக்கக்கூடாது..!

கனடாவின் ரொறொன்ரோ நகரில் ஓர் அழகான வீட்டைப் போலவே, பக்கத்து தெருவில் உள்ள இன்னொரு வீட்டைச் சீரமைத்திருக்கிறார்கள். இதனால் அசல் வீட்டுக்காரர்கள், தங்கள் வீட்டின் மதிப்பு குறைந்துவிட்டதாகக் கூறி 35 கோடி ரூபா இழப்பீடு கேட்டு வழக்கு தொடுத்தார்கள். பார்பரா ஆனும் எரிக் கிரிஷென்ப்ளாட்டும் 3 ஆண்டுகளுக்கு முன்பு ஜாசன், ஜோடி சாப்னிக் தொடுத்த வழக்குக்காக நிம்மதியிழந்திருக்கிறார்கள். "நாங்கள் எங்கள் வீட்டைக் கட்டும் போது கட்டட அமைப்பு, வண்ணம்



என்று ஒவ்வொன்றையும் பிரத்தியேகமாக அமைத்தோம். இதற்காக 7 ஆண்டுகள் உழைப்பையும் பணத்தையும் செலவிட்டோம். இந்த வீட்டைப்போல் இன்னொரு வீடு இந்தப் பகுதியில் இல்லை. எங்கள் வீட்டின் மதிப்பு ஏறிக் கொண்டே இருந்தது. மூன்று ஆண்டுகளுக்கு முன்பு பக்கத்து தெருவில் ஒரு பழைய வீட்டைப் புதுப்பித்தனர். எங்கள் வீட்டைப் போலவே மாற்றிவிட்டனர். இதனால் எங்கள் வீட்டின் மதிப்பு குறைந்துவிட்டது. எங்கள் கற்பனையில் உதித்த விடயத்தை அவர்கள் எளிதாக எடுத்துக் கொண்டார்கள். மிகுந்த மன உளைச்சலில் இருக்கிறோம். எங்களுக்கு ஏற்பட்ட இழப்பை ஈடு செய்ய அவர்கள் மீது வழக்கு தொடுத்தோம். அதற்கான ஒளிப்பட ஆதாரங்களையும் அளித்தோம்" என்கிறார் ஜோடி சாப்னிக்.

"வெளிப்புறத்தில் யன்னல்கள், விளக்குகள், கற்கள் போன்றவை ஒரே மாதிரியாகத் தெரிந்தாலும் எங்கள் வீட்டுக்கும் அவர்கள் வீட்டுக்கும் நிறைய வித்தியாசமிருக்கிறது. நாங்கள் எந்தத் தவறும் செய்யவில்லை. சில ஒற்றுமைகளுக்காக நாங்கள் நஷ்ட ஈடு தரவேண்டும் என்பது எந்தவிதத்தில் நியாயம்? 2015 ஆம் ஆண்டு புதுப்பித்தவுடன் வாங்கியதைவிட அதிகமாக 2 மில்லியன் டொலர்களுக்கு விற்றுவிட்டோம்" என்கிறார்கள் பார்பராவும் எரிக்கும்.

இந்த விநோதமான வழக்கை விசாரித்த நீதிமன்றம், இனிமேல் இப்படி யாரும் இன்னொருவருடைய கட்டட அமைப்பை எடுத்துக் கொள்ளக் கூடாது என்று எச்சரித்து அனுப்பிவிட்டது. நீதிமன்றத்துக்கு வெளியே இரு குடும்பங்களும் சமரச முயற்சியில் இறங்கியிருக்கின்றன. "கட்டடக் கலைக்கும் காப்புரிமை இருக்கும் என்றும் கட்டிடங்களும் ஒருவிதமான கலை என்றும் நாம் பார்ப்பதில்லை. அதனால்தான் ஒரு வீட்டைப் பார்த்து, இன்னொரு வீட்டை மாற்ற முடிந்திருக்கிறது. இந்த வழக்கு மூலம் மக்களிடம் விழிப்புணர்வு வந்திருக்கும்" என்கிறார் சட்டக் கல்லூரி பேராசிரியர் கேரிஸ் க்ரைக்.

# உலகளவில் உருக்கொள்ளும் உணவுப்பஞ்சம்!



- பேராசிரியர் கு.மிகுந்தன் -

உலக உணவு தாபனத்தின் (Food and Agriculture Organization)அண்மைக்கால அறிக்கை உலகளாவிய பஞ்சம் பற்றி உலக மக்களை சிந்திக்க தூண்டியிருக்கிறது. உலக மக்கள் என்று குறிப்பிடும்போது நாமும் எமது பங்குக்கு இந்த பஞ்சத்தை இல்லாதொழிக்க முற்படவேண்டும் என்பது அதனுள் உள்ளார்ந்திருக்கிறது.'தனியொரு மனிதனுக்கு உண வில்லையெனில் ஜெகத்தினையே அழித்திடுவோம்" என முழங்கிய எட்டயபுரத்துக்குரல் ஓய்ந்து விட்டதாக இன்னமும் நாம் கருதவில்லை இதற்குச்சான்றாக இந்த அறிவிப்பு உலக உணவுதா பனத்திலிருந்து ஒலித்திருக்கிறது. உலக மக்களை சிந்திக்கத் தூண்டும் இந்த செய்தியினூடாக எம்மை நாமே காப்பாற்றிக் கொள்ள இதை நாம் நல்லதொரு பாடமாகவும் படிப்பினையாகவும் வரித்துக் கொண்டு துரிதமாகச் செயற்பட வேண்டும்.

உலக உணவுதாபனத்தின் அறிக்கை பலவிடயங்களை கோடிட்டுக் காட்டியிருக்கிறது. அதில் உணவுப்பஞ்சம் என்பது ஒருபுறமிருக்க ஊட்டச்சத்து குறைபாடு என்பது இன்னொரு பிரச்சனையாக எழுந்திருக்கிறது. தற்போது உலகளாவிய ரீதியில் இதற்கான முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருப்பது எம்மையும் மேலும் இதுபற்றி சிந்திக்க வைத்திருக்கிறது. பொதுவாக கடந்த நூற்றாண்டில் பஞ்சத்தின் வீரியம் குறைவடைந்ததாக குறிப்பிடப்பட்டாலும் தற்போது உலகசனத்தொகையைக் கருத்தில் கொண்டால் 11 சதவீதம் அதிகரித்திருப்பதாக புள்ளி விபரங்கள் பல்லிளிக்கின்றன.

2015 ஆம் ஆண்டில் உலகளாவிய ரீதியில் 775 மில்லியன் ஊட்டச்சத்து குறைபாடான மக்களுடன் ஒப்பிடும்போது 2016 ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 815 மில்லியனாக அதிகரித்திருக்கிறது. அதாவது அதிகரிக்கும் மக்கட் தொகையுடன் இந்த ஊட்டச்சத்து நலிவான மக்களின் எண்ணிக்கையும் அதிகரித்திருக்கிறது என்பது இதிலிருந்து புலனாகின்றது. இந்த செய்தி தென்சூடானில் இவ்வாண்டு ஏற்பட்ட பஞ்சத்தோடு சூட்டோடு சூட்டாக உலக மக்களை வந்து சேர்ந்திருக்கிறது. தென்சூடானுடன் நைஜீரியா, சோமாலியா மற்றும் யேமன் ஆகிய நாடுகள் இந்த உணவுப் பஞ்சத்தை இப்பொழுதுதான் உணர்ந்திருக்கின்றன.

இந்நாடுகளில் உள்நாட்டுப் போர்கள் உக்கிரமாக நடைபெற்றுக் கொண்டிருப்பதும் ஏதுமறியாத பொதுமக்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் தினந்தினம் அதிக எண்ணிக்கையில் இறந்து கொண்டிருப்பதும் உலக முதலாளிக ளுக்கு இன்னமும் தெரியவில்லை என்றா நினைக்கின்றீர்கள்? இல்லவேயில்லை இவற்றை கண்டும் காணாதவர்கள்போல பெருமை பேசிக்கொள்ளும் இவர்கள் இவ்வாறான பிரச்சனைகளுக்கு காரணகர்த்தாக்களாக இருக்கின்றார்கள். இவற்றை யெல்லாம் உலகமும் உலக நிறுவனங்களும் ஏதும் செய்ய முடியாது வாளாவெட்டியாக பார்த்துக் கொண்டிருப்பது எமது இயலாமையை எடுத்தியம்புவதாக மேலும் மெருகூட்டுகிறது.

உணவுப்பஞ்சத்தைப் பொறுத்தவரையில் ஆபிரிக்காவி லுள்ள சகாரா பகுதி, தென்கிழக்கு மற்றும் மேற்கு ஆசியா ஆகிய பகுதிகளில் அதிகமாக பாதிக்கப் பட்ட மக்கள் வாழ்வதாக புள்ளிவிபரங்கள் பெருமை பேசுகின்றன. இவ்வாறான பிரதேசங் கள் உள்நாட்டுப்போரில் தம்மையே அழித்துக்கொண்டிருக்கும் போது வெள்ளப்பெருக்கு மற்றும் வறட்சி போன்ற இயற்கையின் அனர்த்தங்கள் இன்னொரு புறத்தில் இம்மக்களை வரட்டியெடுத்துக் கொண்டிருக்கின் றன. எல்நினோவின் (El-nino) தாக்கமும் காலநிலை மாற்றத்தின் (Climate Change) தாக்கமும் இவற்றுக்கு மேலும் வலுவூட்டுவதா கவே அமைந்திருக்கிறது.

கடந்த பத்தாண்டுகளில் உலகளாவிய ரீதியில் உள்நாட்டுப்போர்கள் வலுவடைந்திருக்கின்றதாக தெரிவிக்கப்படுகிறது. இதன்மூலமாக மக்கள் தமது வாழ்விடங்களைவிட்டு இடம்பெயர்ந்ததும், இன்னும் விவசாயத்தை மேற்கொள்ள முடியாத சூழ்நிலைகள் ஏற்படுத்தப்பட்டதாலும் இவ்வாறான துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டுள்ளன. உணவுப்பஞ்சம் ஒருபுறமிருக்க கிடைக்கின்ற உணவும் ஊட்டச்சத்தற்ற உணவாக ஒரு மனிதனுக்கு தேவையான அடிப்படை ஊட்டச்சத்து கூட இல்லாதிருக்கின்ற நிலையும் காணப்படுகிறது. மேலும் தற்போது சந்தைப்படுத்தல் குறிப்பாக ஏற்றுமதி செய்யும் தொகை குறைவடைந்திருப்பதனால் இறக்குமதியின் அளவும் பாதிக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறு இறக்குமதியாகும் உணவுப்பொருட்களுக்கு தட்டுப்பாடு நிகழும்போது அது சராசரி ஒரு மனிதனையும், அவர்சார்ந்த குடும்பத்தையும் வெகுவாக பாதித்துவிடும், பாதிக்கத் தொடங்கியுள்ளது.

விஞ்ஞான தொழில்நுட்பம் அபரிவிதமாக வளர்ந்திருக்கும் இக்காலகட்டத்தில் கூட இவ்வாறான உணவுப்பஞ்சம் ஏற்பட்டிருக்கிறது என்றால் உலகம் எங்கு போய்க்கொண்டிருக்கிறது என்பதனை அனுமானிக்க முடிகின்றதல்லவா. ஒன்றை மட்டும் நினைவில் கொள்ள வேண்டும். தற்போது உலகஉணவு உற்பத்தி இப்போதிருக்கின்ற மக்களுடைய தேவையை பூர்த்திசெய்ய போதுமானதாக அறிவிக்கப்பட்டும் இந்த உற்பத்தியான உணவு சரியாக பகிர்ந்தளிக்கப் பட்டிருந்தால் இவ்வாறான பஞ்சம் ஏற்படுவதற்கு சாத்தியமேயில்லை. அப்படியாயின் உணவு உற்பத்தி, அதன் கிடைதன்மை என்பனவற்றையும் தாண்டி உற்பத்தி யான உணவை உலகத்திலுள்ள அனைத்து மக்களுக்கும் கிடைக்கச் செய்வதில் ஏதோஒரு காரணி தடைக்கல்லாக இருப்பது உணரப்பட்டிருக்கிறது அல்லவா?

இதன் பின்புலத்தில் உற்பத்தியில் தன்னிறைவு கண்ட நாடுகள் குறிப்பாக வளர்ந்த நாடுகள் இருப்ப தென்பது விசித்திரமாகவும் ஆச்சரியமாகவும் இருக்கின்றதல்லவா. அந்த நாடுகளிலிருந்துதான் நாம் வருடாவருடம் கடனையும் பெற்றுக்கொள்ளுகின்றோம். பட்டினி போட்டுவிட்டு கடனும் தருகின்ற செயலை என்னவென்று சொல்வது.

ஒருகாலத்தில் சிங்கப்பூர் இலங்கையின் உயர்வைப் பார்த்து இலங்கையைப்போல வரவேண்டும் என எண்ணினார்களாம். ஆனால் இப்போது நாம் சிங்கப்பூரின் வளர்ச்சியையும் உயர்வையும் அண்ணார்ந்து பார்த்து நாமும் சிங்கப்பூர்போல வரவேண்டும் என எண்ணுகின்றோம். காலச்சக்கரம் எவ்வாறு சுழன்றிருக்கின்றது பார்த்தீர்களா? அவர்கள் எம்மைப் பார்த்து வளர்ந்திருக்கிறார்கள் நாம் நம்மை நாமே அழித்துக் கொண்டோம். தற்போது அவர்களைப் பார்த்து வளர எத்தனிக் கிறோம். ஆனால் அழித்ததிலிருந்து மீள்வதற்கு பல காலம் காத்திருக்க வேண்டியிருக்கிறதே.

விஞ்ஞானம் பிற கோள்களில் மனிதன் வாழலாமா என பெருமெடுப்பில் ஆய்வினை செய்து கொண்டிருக்கும் இக்காலத்தில் உலகின் ஏதோ ஒரு மூலையில் மக்கள் பட்டினியால் இறந்து கொண்டிருக்கின்றார்களென்பது எல்லோர் மனதையும் ஒருகணம் உலுப்பிவிட்டிருக்கிறது. நன்றாக கவனியுங்கள்! இந்த நிலைமை இங்கும் இருக்கிறது. உணவு உற்பத்தி ஒருபுறமும் தினமும் ஒருவேளை கஞ்சிக்கும் வழியில்லாது பல குடும்பங்கள் அல்லாடிக் கொண்டிருக்கிறார்கள். பலர் கிராமங்களுக்குள்ளே எந்தவித வருமானமுமின்றி உதவிகளுமின்றி தவிக்க விடப்பட்டிருக்கும் குடும்பங்களைப் பார்த்தால் இன்றைய நிலைமை நன்கு புரியும். விஞ்ஞானத்தின் உயர்வு ஆக்கத்திற்காய் இருக்கும் மட்டும் அனைத்தும் நல்லதாகவே இருக்கும் ஆனால் அதனை அழிப்பதற்கும் தீங்கு செய்வதற்கும் பயன்படுத்த முயலும்போது விஞ்ஞான வளர்ச்சியின் எதிர்பார்த்த நோக்கம் ஈடேறவில்லை என்று என்னவே தோன்றுகின்றது.

உணவுற்பத்தியிலும் பாரபட்சம் நடந்து கொண்டிருக்கிறது. விரைந்துணவு தயாரிக்கும் நிலையில் உலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது ஆனால் அதற்காக இயற்கையின் தன்மையை மாற்றி சூழலையும் மாற்றி புதியவகை இனங்களை உற்பத்தி செய்து அதனால் ஏற்படும் பின்விளைவுகளை சிறிதும் சிந்திக்காது சுழன்று கொண்டிருக்கும் இவ்வுலகத்தின் சமகால நடப்புக்கள் ஒருபோதும் மக்களின் தேவைகளை முழுமையாக பூர்த்தி செய்யப் போவதில்லை. மாறாக பல தீங்கான நிலைமைகளுக்குள்ளேயே தள்ளி விடப் போகின்றன. பசியும் பட்டினி யும் இன்னும் தலைவிரித்தாடப் போகிறது.

பட்டினியின் பிடிக்குள் சிக்கி சின்னாபின்னப்பட்டுக் கொண்டிருக்கும் பல நாடுகள் கடந்த பத்து ஆண்டுகளாக உள்நாட்டுப் போரின் உக்கிரத்தினுள் உடைந்து போனவையாகவே காணப்படுகின்றன. இவ்வாறான உள்நாட்டுப் போர்களினால் அபிவிருத்தியின் அடித்தளமான கிராமங்கள் உடைத்தெறியப்பட்ட சோகக் கதைகளே அநேகம். அடித்தளத்தை உடைத்தெறிந்து விட்டு எவ்வாறு அபிவிருத்தியை மேற்கொள்ள முடியும்? அதிலும் உணவுற்பத்தியின் அடிப்படைக் கூறுகளே கிராமங்கள்தானே!

பசி பட்டினியினோடு, ஊட்டச்சத்து குறைபாடும் சேர்ந்து மக்களை வாட்டுகின்ற சோகம் உலகத்தில் நடந்து கொண்டிருப்பது அனைவருக்கும் தெரிகிறதா?

(18 ஆம் பக்கம் பார்க்க)

முதல் ஒப்புதல்

> "எந்தச் சமுதாயத்திலிருந்து சம்பாதிக்கிறோமோ அதே சமுதாயத்திற்குத் திருப்பித் தர வேண்டும் என்பதுதான் பொறுப்புள்ள மனிதர்களின் எண்ணம். தான் எப்படி ஒரு வளத்தை உபயோகித்து மேலெழுந்தாரோ அதை மற்றவர்களுக்கும் சொல்ல வேண்டும் என்று விரும்பினார் டி விட் வாலஸ். அத்துடன் அந்த வளத்தைப் ஏற்படுத்திக் கொடுத்த நிறுவனங்களுக்கு அதைத் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்ற சிந்தனையும் டி விட் வாலஸிடம் இருந்தது. தனது இதழுக்கூடாக அதற்குரிய கைமாறைச் செய்யக் கூடியதொரு சந்தர்பத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தார் அவர்.
>
> ஊதியத்திற்கு மேலாக சன்மானம் ஒன்று கிடைப்பது என்பது ஒரு தொழிலாளனுக்கு எத்துணை மேம்பாடாக இருக்கும்? அது அவனை எவ்வளவு உற்சாகப்படுத்தும் என்பதை நன்கு உணர்ந்திருந்தார் டி விட் வாலஸ். அதற்காகவே ஒரு மலரை அவர் உருவாக்கி இருக்கக் கூடும். வழமையான இதழ்களின் வருமானத்தினூடாக அதைக் கைக்கொள்ளாது ஒரு புதிய திட்டம் ஒன்றை உருவாக்கி அதனூடாக இது போன்ற காரியங்களைச் செய்வதென்பது ஒரு நிதானமான வியாபாரியின் திறமை எனலாம். அள்ளிக் கொடுக்கக் கொடுக்க ஊறியிருக்கிறது டி விட் வாலஸின் வளம். கொடுப்பதில் உள்ள ஆனந்தத்தையும் நன்கு அனுபவித்திருந்தார் டி விட் வாலஸ்."
>
> – ஆசிரியர்

# ரீடேர்ஸ் டயஸ்ற் சஞ்சிகை பற்றி...

நாளுக்கு நாள் செலவுகள் அதிகரித்துக் கொண்டே செல்வது என்பது எல்லாத் தொழிலிலும் உள்ள நிலைதான். டி விட் வாலஸ் தன்னுடைய பத்திரிகையின் சந்தாத் தொகையை உயர்த்தாமல் வைத்திருக்க வேண்டும் என்பதில் கவனமாக இருந்தார். ஆனால் தொடர்ந்து விலைவாசி அதிகரித்து வரும்போது அது சாத்தியம் இல்லாததாகத் தோன்றியது. விலை உயர்வால் வாசகர்களும் , பத்திரிகை விற்பனையும் பாதிக்கப்படக்டாது என்பதில் உறுதி கொண்டிருந்தார் அவர். அதுவரை விளம்பரங்களை ஏற்றுக் கொள்ளாமல் இருந்த டி விட் வாலஸ் இனி தனது பத்திரிகையில் விளம்பரங்களும் வெளியிடப்படும் என்று அறிவித்தார்.

இப்படியொரு வாய்ப்பு எப்போது வரும் என்பதற்காகவே காத்திருந்தது போல் பல வணிக நிறுவனங்கள் விளம்பரங்களைக் கொடுக்க ஆரம்பித்தன. விளம்பர வருவாய் கணிசமான அளவு வரத் தொடங்கியது. இலாபமும் அதிகரித்தது. 1955 முதல் விளம்பரங்களை ஏற்றுக் கொள்ள ஆரம்பித்ததன் மூலம் ரீடேர்ஸ் டயஸ்றின் இலாபம் பல மடங்கு பெருகியது. டி விட் வாலஸ் தம்பதியரின் ஒட்டுமொத்தச் சொத்து ஐம்பது மில்லியன் டொலர்களுக்குமேல் என்று மதிப்பிடப்பட்டது.

**செல்வத்துப் பயன் ஈதல்**

எந்தச் சமுதாயத்திலிருந்து சம்பாதிக்கிறோமோ அதே சமுதாயத்திற்குத் திருப்பித்தர வேண்டும் என்பதுதான் பொறுப்புள்ள மனிதர்களின் எண்ணமாக இருந்து வந்திருக்கிறது. டி விட் வாலஸூம் அதற்கு விதிவிலக்கல்ல. 1940களில் ரீடர்ஸ் டயஸ்ற் ஒரு சிறப்பு மலரை வெளியிட்டது. 1941 மே மாதத்தில் கணக்குப் பார்த்த போது மலர் வெளியீட்டின் மூலம் 71,040டொலர் இலாபம் வந்திருப்பது தெரிய வந்தது. மற்றவர்களாக இருந்தால் என்ன செய்திருப்பார்கள் ? அந்த இலாபத்தை மீண்டும் தொழிலேயே போடலாம் என்றுதானே நினைப்பார்கள். டி விட் வாலஸ் அப்படிச் செய்யவில்லை. இலாபத்தைத் தனது தொழிலாளருக்கே பிரித்துக் கொடுக்கத் திட்டமிட்டார்.

மாதம் ஒன்றிற்கு 250டொலர் அல்லது அதற்குக் குறைவாகச் சம்பளம் வாங்கிக் கொண்டிருந்த தொழிலாளர்களின் பட்டியலைத் தயாரிக்கச் சொன்னார். இப்படி 348பேர் இருப்பது தெரியவந்தது. இலாபப் பணம் முழுவதையும் அந்தத் தொழிலாளர்களுக்கு சமமாகப் பிரிந்துக் கொடுக்கும்படி செய்தார் டி விட் வாலஸ். இதை முற்றிலும் எதிர்பாராத தொழிலாளர்கள் அதிக பொறுப்பு உணர்வோடு செயற்பட்டார்கள். டி விட் வாலஸ் தனது தொழிலாளர்களின் உள்ளங்களில் குடியிருப்பவர் ஆனார்.

டி விட் வாலஸ் தம்பதியர்க்குக் குழந்தை பிறக்கவில்லை. அதனால் அவர்கள் தங்கள் வாரிசுகளுக்காகச் சொத்துச் சேர்த்து வைக்க வேண்டிய தேவையும் இல்லாமல் போய்விட்டது. தங்களுக்கு வரும் ஆதாயம் அத்தனையையும் பொது நன்மைகளுக்கு வாரி வழங்குவதில் டி விட் வாலஸூம், லிலாவும் ஈடு இணையற்றவர்களாகத் திகழ்ந்தார்கள். தான் படித்த மகால்ஸ்டர் கல்லூரிக்கு மட்டும் டி விட் வாலஸ் ஐம்பது மில்லியன் டொலர்களுக்கும் மேற்பட்ட தொகையைத் தமது வாழ்நாள் காலத்திலேயே நன்கொடையாக அளித்திருந்தார். மவுண்ட் ஹேர்மன் என்பது ஒரு மாணவர் விடுதி. ஆரம்பத்தில் அங்கு தங்கியிருந்த டி விட் வாலஸ் அதைப் பாதியிலே விட்டு விட்டு வெளியேறி வந்தவர். அந்த விடுதிக்கும் கணிசமான தொகையை வாரிக் கொடுத்தார். விடுதியுடன் இணைந்து இயங்கி வந்த பெண்கள் பள்ளிக்கும் தாராளமாக அள்ளி வழங்கினார். நோர்த் பீல்ட் செமினறி உள்ளிட்ட பல கல்வி அமைப்புகள் ஐந்து மில்லியன் டொலருக்கு அதிகமான தொகையை அவரிடமிருந்து பெற்றன.

**இதழியலுக்காக...**

தம்முடைய வருமானம் முழுவதுமே இதழியல் பணிகளின் மூலமே வந்தது என்பதால் இதழியலுக்கு அவர் ஆற்ற வேண்டிய கடமைகள் நிறைய இருந்ததாகக் கருதினார் டி விட் வாலஸ். இதழியல் கல்வி பயிலும் மாணவர்களுக்கு உதவும் வகையில் கல்வி உதவித் தொகைகளை வழங்க ஏற்பாடு செய்தார். இதழியல் பணிகளில் ஈடுபடுபவர்கள் விரிவாகச் சுற்றுப் பயணங்களை மேற்கொள்ள வேண்டியது அவசியம். இத்தேவைகளுக்காகவே பெரும் தொகையை ஒதுக்கி உதவித் தொகைகளை அளிக்க ஏற்பாடு செய்தார். நியூயோர்க் பொது நூலகத்திற்கு தான் நிறையவே நன்றிக் கடன்பட்டிருப்பதாக எண்ணினார்.

ஆரம்ப காலங்களில் அங்குதான் மணிக்கணக்காக உட்கார்ந்து பல்வேறு இதழ்களைப் படித்துக் கையால் குறிப்புகளை எடுத்துக் கொண்டிருப்பார். அந்த நூலகத்திற்குத் தம்மால் இயன்ற உதவிகளை அளிக்க முன்வந்தார். வாசகர்களுக்கான வசதிகளை அதிகரிக்கவும், இதழ்கள் வைக்கப்பட்டிருக்கும் அறைகளை மேம்படுத்தவும் பதினெட்டு லட்சம் டொலர்களை வழங்கினார். டி விட் வாலஸ் தனது பங்கிற்கு நன்றிக் கடனைச் செலுத்திவிட்டார். பதிலுக்கு அந்த நூலக நிர்வாகமும் நன்றி தெரிவிக்க விரும்பியது. அதற்கு என்ன வழி என்று ஆராய்ந்தது. நூலகத்தின் எந்த அறையில் டி விட் வாலஸ் தனது ஆரம்பப் பணிகளைச் செய்து வந்தாரோ, அந்த அறைக்கு அவர் பெயரைச் சூட்டுவதென்று முடிவு செய்து அதை நிறைவேற்றினார்கள்.

**ஊரைச் சுற்றினால்...**

பத்திரிகை எழுத்துத் துறையில் இருப்பவர்கள் நிறையப் பயணம் செய்ய வேண்டும் என்பது அனைவருக்கும் தெரிந்ததொரு அடிப்படைச் செய்தி. அப்படிப் பயணம் செய்வது அவர்களது அறிவையும், தன்னம்பிக்கையையும் வளர்ப்பதற்கு அத்தியாவசியமானது என்ற கருத்தைக் கொண்டிருப்பவர் டி விட் வாலஸ். வீரதீரச் செயல்களுக்கு வாய்ப்பு அளிக்கும் பயணங்களைப் பத்திரிகையாளர்கள் மேற்கொள்ள வேண்டும் என்பது அவரது பேரவா. "அவுட்வேட் பவுண்ட்" என்ற அமைப்பு இத்தகைய பயணங்களுக்கு ஏற்பாடு செய்து வந்தது. இது குறித்துத் தனது இதழ்களில் பலமுறை டி விட் வாலஸ் எழுதியிருக்கிறார். ஒரு முறை அந்தத் தலைமைப் பொறுப்பை வகித்து, வந்த ஜோசுவா மைனர் என்பவரை மதிய விருந்துக்கு அழைத்தார் டி விட் வாலஸ். விருந்து முடிவடைந்து ஜோசுவா மைனர் விடை பெறும் நேரத்தில் அவசர அவசரமாக ஒரு உறையை எடுத்து வந்து அவரது சட்டைப் பையில் திணித்தார் டி விட் வாலஸ். அதை அப்போதே பிரித்துப் பார்க்க அவகாசமில்லாதவகையில் அதை அளித்திருந்தார் டி விட் வாலஸ். அதையும் ஒரு காரணத்தோடேயே அவர் செய்திருந்தார்.



(தொடரும்)

## இலங்கை – மியான்மார்... (06ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒட்டு மொத்த ரொஹிங்கியா முஸ்லிம்களையும் நாட்டை விட்டு துரத்திட நினைக்கிறார்கள். இலங்கையிலும் முஸ்லிம் மீதான வன்முறை இதை தவிர்த்து புதிதான காரணங்களுக்காக நடக்கவில்லை என்பது தனிப்பட்ட அனுமானம். இன வன்முறைகளின் போது வர்த்தக நிலையங்கள் முதலில் தீக்கிரையாக்கப்படுவது ஆழ்மனதில் வக்கிரங்களையே காட்டுகிறது. அது மியன்மார் என்றாலும் இலங்கை என்றாலும் ஒரே மாதிரித்தான் அவர்களின் மனங்களில் பிரதிபலிக்கிறது. மியான்மாரோ , இலங்கையோ பேரினவாதம், சிறுபான்மை இன குழுக்களை இருக்குமிடம் தெரியாமல் இருந்துவிட்டு போவதையே எதிர்பார்க்கிறது இரண்டு நாடுகளினதும் நிலைமையும் ஒன்றுதான்

ஐம்பது அறுபது வருடங்களுக்கு நிலைத்து நிற்கும் இனங்களுக்கு இடையேயான பகைமை, இரண்டு நாடுகளையுமே நிறைய பாதித்திருக்கிறது. இனவாதம், பாரபட்சம், நீண்ட போர், அரசியல் ஒற்றுமை இன்மை, குறுகிய மனப்பான்மை இலங்கையை உலக அரங்கில் மந்தமான நாடாக ஆக்கிய வரலாற்று அனுபவத்தில் இருந்து பாடம் கற்றிருக்கலாம். அதை விடுத்து

ஐம்பது வருடங்களுக்கு வெளி உலக தொடர்புகள் அடைக்கப்பட்டு, இருண்ட தேசமாக இருந்த மியன்மார் மீண்டும் உலகுக்கு அஹிம்சையை போதித்த மதத்தின் பேரால் நடாத்தும் அராஜகம் மேலும் மோசமான எதிர்காலத்துக்கே இட்டு செல்லும்.

## குர்திஷ், கட்டலோனியா... (16ஆம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளான குர்திஷ் மக்களுக்கு பிராந்திய அரசை 'உருவாக்கித் தந்த' அமெரிக்காவும் தன்னுடைய நிஜ முகத்தைக் காட்டிவிட்டது. மசூத் பர்சானி தலைமையிலான குர்திஷ் பிராந்திய அரசு அமெரிக்காவின் கைப்பாவை என்று சொல்லக்கூடிய அளவுக்கு அமெரிக்க நலன்களுக்கு ஒத்தாசை செய்து வந்தது. அமெரிக்கர்களால் நேரடியாக எதிர்கொள்ள முடியாத ஐ.எஸ்களை ஒழித்துக்கட்டியதில் குர்திஷ்களின் பெஷ்மெர்கா படையினரின் பங்கு அதிகம். குர்திஷ் பகுதி தனிநாடாகச் செல்லவேண்டும் என்று அவர் உறுதியாக முடிவெடுத்தபோது, அவரைக் கைகழுவியது அமெரிக்கா. அப்படியென்றால் கட்டலோனிய, குர்திஷ் கனவுகள் என்ன ஆகும்? வல்லாதிக்கவாதத்தின் முடிவு என்னவாக இருந்தாலும், மக்கள் முடிவெடுத்துவிட்டால், நீண்ட காலம் அதை மறுத்து நிராகரிக்கும் ஆற்றல் யாருக்குமே இல்லை என்பது வரலாறு. காலனிய சகாப்தத்தில் போடப்பட்ட எல்லைக் கோடுகளை மாற்றவிடக் கூடாது என்று வல்லரசுகள் விரும்புகின்றன. அதை மீறி சுதந்திரம் வேண்டுமானால், வல்லரசுப் போட்டிக்களத்தில் ஏதேனும் ஒரு அணியை அனுசரித்து சுதந்திர யாசகம் கேட்க வேண்டிய கட்டாயத்தை அவை உருவாக்கி வைத்திருந்தன. அந்த யதார்த்தத்தைப் புரிந்துகொண்டுள்ள அதே நேரத்தில், குர்திஸ்தானியர்களும், கட்டலானியர்களும் சுயநிர்ணய உரிமையை வெல்வதற்கான வழியைக்கூட சுயமாக நிர்ணயித்துக்கொள்ளத் தொடங்கிவிட்டன என்பதுதான் இப்போது வந்திருக்கும் புதிய செய்தி. இது உலக, வட்டார வல்லரசுகளுக்கு விடப்பட்டுள்ள புதிய சவாலும்கூட!

## மறைக்கப்பட்ட அத்திவாரம்... (06ஆம் பக்கத் தொடர்ச்சி)

தீர்ப்பு அன்று வழங்கப்பட்டிருக் குமானால் சுவிஸ்குமாருக்கு சீனியராக இருவரும் இருந்திருப்பார்கள். ஜனா ஆரையம்பதியில் விஜி என்றழைக்கப்படும் நல்லதம்பி அனுஷ்யா. -என்ற மாணவி மீது பாலியல் வன்முறை மற்றும் படுகொலை செய்த ஆயுதக்குழுவின் தலைவர்.

இரா.துரைரத்தினம் காத்தான்குடியைச் சேர்ந்த ரிபாயா மீது மேற்கொள்ளப்பட்ட குற்றங்களை செய்த குழுவின் தலைவர் இதனை இன்னுமொரு ஆவணம் உறுதிபடுத்துகிறது .

*10.10.2017.* supeedsam. com. இணையதளத்தில் பிரசுரிக்கப்படட "காசிநாதர் அவர்கள் வாழும்போதே நினைவு மீட்கும் என் பதிவு " இணைந்த வட, கிழக்கு மாகாண சபையின் அவைத்தலைவர் ராம் என்பவர் எழுதிய கட்டுரை இதை உறுதிப்படுத்துகிறது.

இதில் சம்பந்தப்படட இன்னுமொரு தமிழ்ப்பெண் இன்னும் உயிருடன்தான் இருக்கிறார். http://www.supeedsam.com/?p=54343

அவர் தங்களை மட்டக்களப்பு நகர்கடைத் தெருவீதியில் காந்தி சிலைக்கு அருகாமையில் வைத்து விசாரிக்க வேண்டும் என்று கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் அன்றைய நீசுடுகு. மாவட்டத் தலைவர் இரா. துரைரத்தினம் கூட்டிச் சென்றவர் என்றும், அலுவலகத்தில் இருந்த EPRLF. உறுப்பினரும் இணைந்த மாகாண சபையின் நிதிஅமைச்சர் கிருபாகரன் தங்களை சித்திரவதை செய்ததாகவும் கூறினார். ராமின் கூற்றுப்படி"வந்த பெருநிதியை முக்கியமானவர்கள் தமக்கும் தம் உறவுகளுக்கும் முடக்கியபின் எஞ்சியதை ஏனையவர்க்கு பகிர்கையில் பலதும் நடந்தது. காத்தான்குடி பெண்ணை இச்சைக்காக சுகித்து புலி என மண்ணுள் புதைத்து மாகாணசபைக்கு வந்தவன், என்ற வரிகள் இதனை உறுதிப்படுத்துகின்றன.

புலிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கும் போது இரா . துரைரத்தினம், ஜனா இருவரையும் எந்தக்காலத்திலும் உள்வாங்கக்கூடாது என அந்தந்தக் கட்சித் தலைவர்களிடம் வலியுறுத்தி இருந்தனர். அடுத்த மாகாணசபைத் தேர்தலிலும் இவ்விருவரையும்கூட்டமைப்பு களமிறக்கினால் மாற்று அரசியலை எதிர்பார்க்கும் அனைவரும் இவர்களை நிராகரிக்கவேண்டும்.

இவர்களோடு ஒப்பிட்டால் இராஜதுரை செய்தது அற்பமே. மாற்று அரசியலை எதிர்பார்ப்போர் இராஜதுரையின் அனுபவங்களையும், அறிவுரைகளையும் முன்மாதிரியாகக் கொண்டு செயற்பட வேண்டும். இராஜதுரை மீது உள்ள மதிப்பு இன்னும் மக்களுக்குக் குறைந்து விடவில்லை என்பது மக்களின் மத்தியில் இறங்கிப் பணியாற்றினால் தெரிய வரும் .

## காவிகளின் அரசியலும்... (21ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர் அரசியலை வெறுத்து ஒதுக்கினார். இவர்கள் தமது மதக் கடமைகளை வெறுத்து (ஆனால் துறக்கவில்லை) அரசியலை தமது மக்கள் கடமைகளாகக் கொண்டிருக்கின்றனர்.

சிங்கள மக்கள் அரசியல் நலன்கள் என்று வரும்போது இரண்டு உயர் பௌத்த பீடங்களும் ஒரு குடையின் கீழ் சென்றுவிடும் என்பது தான் உண்மை. கடந்த காலத்தே யுத்த வெற்றியாளர்களையும் அதற்குத் துணைபோன படை வீரர்களையும் காப்பாற்ற வேண்டும் என்பதில் அதிக ஆர்வமுள்ளவர்களாக இந்தப் பீடங்கள் செயற்பட்டிருக்கின்றன. எமது தமிழ் அரசியல் வாதிகளுடான சந்திப்புகளிலும் பௌத்தர்கள் அதிகம் வாழும் இத் தீவில் பௌத்தத்திற்கு முதலிடம் கொடுப்பதில் தப்பேதும் இல்லை என்ற கருத்துப்பட தேரபீடங்கள் தமது கருத்தைத் தெரிவித்திருக் கின்றனர். இதைவிட கிழக்கு மாகாணத்தில் தேரர்களின் அரசியல் பல இடங்களில் மக்கள் அதிருப்தியைச் சந்தித்திருக்கிறது. மட்டக்களப்பில் தலைமைப்பிக்கு ஒருவர் காணிப் பிணக்கொன்றில் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட கட்டளையைப் பகிரங்கமாகக் கிழித்து எறிந்திருக்கிறார். இது மாபெரும் குற்றம் என்று ஒரு சாதராணருக்குக் கூடத் தெரியும். இருந்தும் இலங்கை நீதித்துறை இன்றவரை அந்த விடயத்தில் மௌனம் சாதித்திருப்பதன் மர்மம் என்ன? இந்த நாட்டில் எல்லா வற்றையும் விட தேரர்களுக்கு இருக்கின்ற சக்தியையே இது சொல்லமல் சொல்கின்றது. தமிழ் மக்கள் தமது காணிகளை விடுவதற்கு இராணுவத்துடன்தான் பேச வேண்டும் என்ற நிலைக்கு எப்போது உந்தப்பட்டனரோ? புதிய அரசியல் உருவாக்கத்திற்கும், இனப் பிரச்சினைக்கான தீர்வுக்கும் தேர பீடங்களின் ஆசிர்வாதத்தைப் பெறவேண்டும் என்று சிங்கள அரசியல்வாதிகள் எப்போது நம்பத் தொடங்கினரோ? அன்றே சமாதானத்திற்கான முயற்சிகளும் மரணித்துவிட்டன. அமைதியானதொரு இலங்கைக்கான இலக்கும் இல்லாது போய்விட்டது.

எனவே இந்த நாட்டின் அரசியலைத் தீர்மானிக்கும் சக்தி மிக்கவர்களாக, பலவான்களாக பௌத்த பிக்குகள் இருக்கும் வரை நீதியான, சமாதானமான ஒரு அரசியல் நிரந்தரத் தீர்வென்பது சாத்தியமில்லை. அப்படி பௌத்த பீடத்தின் ஆசிர்வாதம் எமக்கு அவசியமில்லை என்றால் சர்வதேசம் தலையிட்டு ஒரு முடிவைத் தரவேண்டும். அல்லது நாம் போராட வேண்டும். எமக்காக சர்வதேசம் குரல் கொடுப்பதும். ஒன்றிணைந்து நாம் போராடுவது என்பதும் சாத்தியமா? என்பது ஒருபுறம் இருக்க. பௌத்த - சிங்கள பேரினவாதப் பிடியில் இருந்து விடுபட இலங்கை சித்தமாக இருக்கிறதா என்பதே பெருங்கேள்வி.

## உலகளவில் உருக்கொள்ளும்... (16ஆம் பக்கத் தொடர்ச்சி)

சத்துணவு திட்டங்கள் உருவாக்கப்பட்ட இடங்கள் பலவற்றில் ஒருவேளை உணவுக்காகவாவது பாடசாலைக்கு பிள்ளைகள் செல்வதே வேதனைக்குரியது. உலகத்திலுள்ள 5 வயதிற்கு கீழான 155 மில்லியன் பிள்ளைகள் ஊட்டச்சத்து குறைபாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளனர். என்பது மிகமுக்கியமான தகவலாக அனைவரையும் சிந்திக்க தூண்டியுள்ளது. இன்னும் நம்மில் பலருக்கு இந்த ஊட்டச்சத்து குறைபாட்டினால் ஏற்படும் பாதிப்புக்களைப் பற்றி அறிந்துரை முடியாதுள்ளனர். இந்த பிரச்சினைகளை மையப்படுத்தி நமது பிரதேச திட்டங்களனைத்தும் இதற்கான தீர்வினை வலியுறுத்துவதாக அமைய வேண்டும். திட்டங்களின் முடிவுகள் மாற்றுவழிகளை பரிந்துரைக்கும் நேரத்தில் அவற்றிற்கான முடிவுகளையும் தீர்க்கமானதாக அறிவிக்க வேண்டும். எமது பிரதேசத்தில் இந்த உணவுத் தட்டுப்பாடு ஏற்படாமலும் ஊட்டச்சத்து குறைபாட்டினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும், இன்னும் அவசியம் தேவைப்படுவோர் என இனங்காணப் படுபவர்களுக்கும் வழங்கப்பட ஆவன செய்யப்பட வேண்டும்.

உள்நாட்டுப்போரில் துவண்டு போன வடஉகண்டா நாடு போருக்கும் பின்னரான சரியான திட்டமிடல்களுக்கூடாக தற்போது தம்மை வளமுள்ளவர்களாக மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். வளமான சந்ததியின் எதிர்காலம் சரியாக தீட்டப்படும் திட்டங்களிலும் அவற்றை நடைமுறைப் படுத்துவதிலும் மேலும் அதற்கான சேவைகளிலும் தங்கியுள்ளது. 'சிறுகக்கட்டி பெருக வாழ்' என்பதில் எமது மூதாதையர் 20 முக்கியமான செய்தியாக சொல்லியுள்ளனர். இதனை முழுமையாக நாம் உணர்ந்து கொண்டால் மேற்கூறிய பிரச்சனைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கலாம்.



# நடக்கப் போகிறார் நடராஜா

நவீன நகைச்சுவைத் தொடர் 19

— உமா சந்தோஷ் —

நீண்ட நேரம் தனது சகோதரி டொக்டர் மச்சாளுடன் கதைத்துக் கொண்டிருந்த நடா மனைவி கடிகாரத்தைப் பார்த்தார். மணி இரவு 12 நடுநிசியைத் தாண்டியிருந்தது. 'நேரம் போச்சுது' என விரைவாக நடா படுத்திருந்த அறைக்குள் சென்றார் நடா மனைவி.
கொ...ர்ர்ர்ர், எனக் குறட்டைவிட்டு உறங்கிக் கொண்டிருந்தார் நடா. ஏதே...தோ எல்லாம் நடக்கலாம் என்று எண்ணிக் கொண்டிருந்த நடா மனைவிக்கு மனம் சற்று ஆறுதலாக இருந்தது. லைற்றை அணைத்துவிட்டு உறங்கிவிட்டார்.

காலை 5மணி இருககும் கோயில் மணியோசை கேட்டு கண்விழித்தாள் நடா மனைவி. சிவன் கோயிலில் இருந்து சுப்பிரபாதம் கேட்டுக் கொண்டிருந்தது.

'ஐ..யோ!....ஐ..யோ!' எனப் புசத்திக் கொண்டு கிடந்தார் நடா. இதைக் கேட்டுத் திடுக்கிட்டார் நடா மனைவி. உடல் கண கணத்துக் கொண்டிருந்தது. 'இஞ்சை வந்து பாரும். நடாவுக்குக் காய்ச்சல் அடிக்கிது' என கத்திக் கொண்டே டொக்டர் மச்சாளின் அறைக்கு ஓடினார். டொக்டர் மச்சாளும் தனது மெடிக்கல் கிற்றோடு நடாவின் அறைக்கு ஓடி வந்தார். 'காய்சல் அவ்வளவு இல்லை. பிறசர்தான் கொஞ்சம் கூடவாக் கிடக்கு' என்று சொல்லிவிட்டு நடாவின் மனைவியை கொஞ்சம் சூடாகத் தண்ணி போட்டுக் கொண்டு வருமாறு பணித்தார். நடாவின் மனைவி போனதும் நடாவின் மருந்துப் பெட்டியை எடுத்து பிறசர் குளிசையைத் தேடினார். பெட்டிக்குள் வயகராவைக் கண்டார். அவருக்குத் தூக்கிவாரிப் போட்டது. 'அத்தான்...அத்தான்' என நடாவின் தலையை அசைத்தார். நடா மெல்லக் கண் திறந்தார். 'எப்பிடி இருக்கு?' டொக்டர் மச்சாள் விசாரித்தார். 'குளிராக் கிடக்கு' நடா முணுமுணுத்தார்.

'நான் ஒரு டொக்டர் எண்டு கேக்கிறன். உண்மையைச் சொல்ல வேணும். அத்தான் நேற்று என்ன சாப்பிட்டனீங்கள்?' டொக்டர் மச்சாள் கேட்டார். 'ஒண்டும் வித்தியாசமாச் சாப்பிடேல்லை.' நடா தடுமாறினார். நடாவின் விழி பிதுங்குவதிலிருந்து அவர் ஏதோ தப்புப்பண்ணி இருக்கிறார் என்றதை டொக்டர் மச்சாள் தெரிந்து கொண்டார். அன்பாகவும், ஆதராவாகவும் நடாவுடன் பேசி ஒருவாறு முதல் நாள் நடந்ததை அறிந்து கொண்டார் டொக்டர் மச்சாள்.

நண்பகல் சாப்பாட்டு நேரம். நடாவைச் சுற்றியே எல்லோரும் இருந்தனர். பிறசர் இன்னும் இறங்கவில்லை. டொக்டர் மச்சாளைத்தவிர யாருக்கும் நடாவிற்கு ஏன் பிறசர் குறையவில்லை என்று தெரியாது. நடாவின் மனைவிதான் ஒரிடத்தல் நிற்காது அங்கு மிங்குமாக அலைந்து திரிந்தார். இடையிடையே அர்ச்சனைத் திருநீற்றைக் கொண்டு வந்து நடாவின் நெற்றியில் தடவிவிட்டுச் சென்றார். இடையிடையே புலம்பிக் கொண்டு டொக்டர் மச்சளிடம் வாங்கிக் கட்டினார்.

மாலை ஆகியும் நடாவுக்குப் பிறசர் குறையவில்லை. அத்துடன் டையபற்றிக்கும் கூடவாக இருந்தது. சாதுவாகக் களைத்துப் போய்க் காணப்பட்டார். எனவே பெரியாஸ்பத்திரியில் தனக்குத் தெரிந்த டொக்டரிடம் காட்டலாம் என்று தீர்மானித்து டொக்டர் மச்சாளும், நடா மனைவியும் அவரைக் கூட்டிக் கொண்டு ஆஸ்பத்திரிக்குப் போனார்கள்.

அறிமுகமானதால் நடாவுக்கு ஆஸ்பத்திரியில் இராஜ மரியாதையாக எல்லாம் நடந்தது. உடனடியாக ஐ.சி. யூவிலை அட்மிட்டானார் நடா.

மறுநாள் காலை எட்டு மணி. டொக்டர் மச்சாள் தனியாக வந்தார். அங்கு நின்ற மிஸிமார்களிடம் விபரத்தைக் கேட்டார். பிறசர் குறைந்திருந்தது. டையபற்றிக்கும் நோமல். அன்று நண்பகலே வாட்டுக்கு மாற்றலாம் என்றும் அதற்கு அடுத்த நாளே வீட்டுக்குப் போகலாம் என்றும் டொக்டர் சொன்னவராம்.
நண்பகல் நடா வாட்டுக்கு மாற்றப் பட்டார். அவர் மனைவி காலடியிலிருந்து பார்க்க வந்த நடா மச்சாளிடம் பேசிக் கொண்டிருந்தார். மாலையானதும் புறப்படத் தயாரானபோது நடாவின் தலையணைக்கு அடியில் ஒரு ஐநூறு ரூபாவைக் அவசரத்துக் கெனக் கொடுத்தார். பின்பு நடா மச்சாளுடன் புறப்பட்டுப் போனார்.

அதற்கிடையில் நடா தனக்கு பக்கத்துக் கட்டிலில் படுத்திருந்த வரோடு நல்ல சிநேகமானார். அவரிடமிருந்து அன்றைய தினசரியை வாங்கிப் படித்தார் நடா. மாலை அவரைப் பார்க்க வந்தவர் அவருக்கு பழங்கள் வாங்கக் கடைக்குப் போகப் புறப்பட்டார்.

எனக்கும் ஒரு சாமான் வாங்க வேணும்' எனத் தனது தலையணைக்குக் கீழிருந்த அந்த 500ரூபா நோட்டை எடுத்துக் கொடுத்தார் நடா

நடா கேட்டதற்கிணங்க போனவர் ஒரு பணிசும், நெஸ் கோப்பியும் வாங்கிக் கொண்டு வந்தார். மருந்து வாய்க்கு இதமாக இருந்தது. நடா இரசித்தும், ருசித்தும் சாப்பிட்டார் நடா. நன்றாகத் தூங்கிவிட்டார்.

மறு நாள் காலை. டொக்டர் மச்சாள் வரவும் வாட்டுக்குப் பொறுப்பாக இருந்த மிஸி ஒரு முறைப்பாட்டோடு காத்திருந்தார். மீண்டும் நடாவுக்கு சுகர் கூடிக்கிடந்தது. காரணம் யாருக்கும் தெரியவில்லை. டொக்டர் மச்சாளுக்கு இது புதிதல்ல. அவருக்கு நடாவின் திருகுதாளம் தெரியும். அதனால் அவர் பதட்டப்படாமலே கேஸைக் கையிலெடுத்தார்.

நடாவுடன் ஆற அமர்ந்து கரதத்தால் விடயத்தைக் கறக்கலாம் என்று டொக்டர் மச்சாளுக்குத் தெரியும்.

(தொடரும்)

## "தித்திக்கும் தீபாவளி ..."

தமிழோடு சேரும்
தனிப்பெரும் பண்டிகை
எம் உயிரோடு வாழும்
உணர்விலே ஊறும் .!
திக்கெட்டும் போற்ற
தீமைகள் போக்க
தித்திக்க வருதே தீபத்தின் திருநாள்.!
மனித நேயத்தை
மானிடர் அறிய
இனிதே வருதே
இதமாய்த் திருநாள்.!
ஆன்மீகம் .பக்தி
ஆண்டவன் கீர்த்தி சந்ததி
அறிய சாற்றுமே இந்நாள்...!
ஒளியை வரிசையாய்
ஒளிர்ந்திட வைப்பதே
அழிந்த சூரனின்
இறுதி ஆசையாய் அமைந்தது..!
நரகா சூரனை நாரணன் வதைத்திட
மரபாய் அந்நாள்
மாபெரும் திருநாள்...!
தீமையை தீயால்
தீபாவளி தினத்தில்
நாமளும் ஒழித்து
நலமுடன் வாழ்வோம்.!
அகத்தே இருக்கும்
ஆணவ இருளை
தகர்த்தே எரிக்க
தானேற்று தீபம்...!
பலகாரம்.முறுக்கு
பல்சுவை உணவால்
பலகால பகையும்
பாரிலே விலகும்.!
வெடிகள் வெடித்திட
வேற்றுமை நீங்கிட
கூடியே கொண்டாட
கூடுதே தீபாவளி.!
மனிதாபிமானம் கொண்டு
மனிதனை மதிப்போம்
இனிதான திருநாளில்
இன்பமாய் வாழ்வோம்.!!!

நித்தீஷ் கவிவர்மன்
மட்டக்களப்பு கன்னன்குடா.

## சோகம்

காலில் முள் குத்தினாற் போல வலி
என் நெஞ்சினிலே
கண்ணீர் விட்டு அழ
வெட்கம் கொள்கிறேன்
அச்சம் கொள்கிறேன்
உயிரோடு வாழ்ந்திட
வெறுக்குது மனம்
தீ பிடித்து எரியுது உயிர்
கூடல் அற்ற ஊடலாகத் தான்
நான் வாழ்கிறேன் தனிமையிலே
நான் படைத்த கதைகளில்
வேதனைகள் ஆயிரம் என்பதால்
என்னை படைத்தவனும் சோகங்கள்
மட்டுமே பல தந்திட்டானோ
சாகத் துணிவில்லை
வாழ முடியவில்லை
அய்யோ வாழப் பறிதவிக்கிறேன்
ஆண்டவனே...

பருத்தி குரு.

# மறைக்கப்பட்ட அத்திபாரம் இராஜதுரை

**– மட்டுநேசன் –**

மட்டக்களப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்லையா இராஜதுரையின் கடந்தகால அனுபவங்களின் நினைவு மீட்டல் அண்மைக்காலமாகப் பரவலாகப் பேசப்பட்டு வருகிறது. இன்று எந்தச் சின்னம் வட, கிழக்கில் கோலோச்சுகிறதோ அதனை மட்டக்களப்பில் அறிமுகப்படுத்திய வர் அவர். அவரது அனுபவங்கள் இளையதலைமுறையினருக்குப் பாடமாக உள்ளது. தற்போதைய தமிழ்த்தேசியவாதிகள் எனப் படம்காட்டுபவர்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கவும் வைத்தன. ஆடையில்லா ஊரில் கோவணம் கட்டியவன் கோமாளிதான் என்றே தற்போதைய அரசியல்நிலை உள்ளது.

தந்தை செல்வாவின் நினைவுத் தூபிக்கு அஞ்சலி செலுத்த வந்த அவரை எப்போதுமே பரபரப்புக்காக எதையாவது பண்ணித் தொலைக்கும் எம்.கே. சிவாஜிலிங்கம் 'மட்டக்களப்பு துரோகி" சக்கிலியா என வசைபாடியது யாழ்ப்பாண மக்கள் அனைவரையுமே தலைகுனிய வைத்தது.

எப்போதுமே யாழ்ப்பாண மக்கள் இராஜதுரையை மதித்தவர்கள் தமிழரசுக்கட்சி மகாநாட்டிலோ, கூட்டத்திலோ இராஜதுரை பேசுகிறார் என்றால் வருகைதரும் மக்களின் எண்ணிக்கை இரண்டு அல்லதுமூன்று மடங்காகக் காணப்படும். பல மைல் தூரம் துவிச்சக்கரவண்டியிலோ, பேரூந்திலோ பயணித்து வரும் கட்சி விசுவாசிகள் திரும்பிப் போகும்போது அவரது உரையில் தாம் ரசித்த பகுதிகளைச் சிலாகித்துச் செல்வர். 'சொல்லின்செல்வர்" என்ற அடைமொழி இராஜதுரை அவர்களுக்கு மிகப் பொருத்தமாகவே இருந்தது.

'மட்டக்களப்பில் குழல் புட்டு இருப்பது போல் தமிழரும் முஸ்லிங்களும் வாழ்ந்து வருகிறோம்" என்ற அவரது உவமானம் யாழ்ப்பாணத்தவரால் மிகவும் ரசிக்கப்பட்டது. 'தேங்காய்ப்பூ அடுத்துமா என மாறிமாறி குழல்புட்டு இருப்பதுபோல் தொடர்ச்சியாகத் தமிழ் - முஸ்லிம் கிராமங்கள் அமைந்திருக்கின்றன" என அவர் சுட்டிக்காட்டினர்.

வித்துவத்தனத்தைக் காட்டாமல் எளிய உவமானங்கள், சரளமானஉரைமூலம் வடக்கு மக்களின் கவனத்தை ஈர்த்தவர் அவர்.

தமிழர் விடுதலைக்கூட்டணி 1977 தேர்தலைச் சந்தித்தபோது கட்சியில் இரண்டாம் அல்லது மூன்றாவது நிலையில் இருந்தவர். அவருக்கு உரிய கௌரவம் கொடுக்கப்படாதது துரதிஷ்டவசமானதே. தந்தை செல்வா உயிரோடு அப்போது இருந்திருந்தால் இந்தநிலை தோன்றி இருக்காது. கவிஞர் காசி ஆனந்தனின் பிறந்தநாளைக் கொண்டாட அன்றைய இளைய தலைமுறையினர் விரும்பினர். தந்தை செல்வாவுக்கு அழைப்பு விடுத்தனர். இவர்களின் அழைப்பை அவரும் ஏற்றுக்கொண்டார். புகையிரதம்மூலம் பயணித்து மட்டக்களப்பைச் சென்றடைந்தார். இவரைச் சந்தித்த பாலிப்போடி சின்னத்துரை (பின்னாளில் யோகன் பாதர் எனப் போராளிகளால் அழைக்கப்பட்டவர்), ராஜ்மோகன் (தமிழீழ விடுதலைக் கழுகுகள் படைநிறுவநர், பின்னாளில் புளொட்டுடன் ஏதோ ஒருவகையில் பணியாற்றிக் காணாமல் போனவர்) ஆகிய இருவரும் இவ்விழா தொடர்பான துண்டுப் பிரசுரத்தை வழங்கினர்.

அதனை வாசித்ததும் தந்தை செல்வாவின் முகம் மாறியது. "இதில் இராஜதுரையின் பெயர் போடப் படவில்லையே ஏன்" எனக் கேட்டார். இவர்களால் பதில் சொல்ல முடியவில்லை. அவ்வளவுதான் - தனக்காகச் செய்யப்பட்ட அத்தனை ஏற்பாடுகளையும் புறந்தள்ளி விட்டதுடன எவரையுமே சந்திக்காமல் வாடிவீட்டில் தங்கிவிட்டு திரும்பிச் சென்றார் தந்தைசெல்வா. இராஜதுரை மீது தான் எவ்வளவு அன்பும் மரியாதையும் வைத்துள்ளார் என்பதை அன்றைய இளைஞர்களுக்கு உணர்த்தினார் இவர்.


எம்.கே. சிவாஜிலிங்கம்

இவரது மறைவின்பின் இராஜதுரை கட்சியிலிருந்து தானாகவே விலகிச் செல்லும் முடிவை எடுக்க அன்றைய கட்சித் தலைமை தூண்டியது. இரட்டை அங்கத்தவர் தொகுதியான மட்டக்களப்பில் தொடர்ந்து முதலாவது எம்.பி.யாக இருந்து வந்த அவரை பொத்துவில் தொகுதியில் போட்டியிடச் சொன்னார்கள் அவர் சம்மதிக்கவில்லை. அடுத்து அன்றைய இளைஞர்களின் கதாநாயகனாகத் திகழ்ந்த காசிஆனந்தனைக் களமிறக்கினார்கள். இந்த அரசியல் சூழ்ச்சிக்குக் காசிஆனந்தனும் பலியானமைதான் பரிதாபகரமானது.

மட்டக்களப்பு இரட்டை அங்கத்தவர் தொகுதி ஆக்கப்பட்டதே தமிழரிலும், முஸ்லிமிலும் தலா ஒருவர் தெரிவுசெய்யப்பட வேண்டும் என்பதற்காகத்தான். அன்றைய சூழலில இன்னொரு வேட்பாளரை நிறுத்த வேண்டுமெனக் கட்சி தீர்மானித்திருந்ததால் வீட்டுச்சின்னத்தில் ஒரு முஸ்லிமை நிறுத்தி இருக்கலாம். அத்தேர்தல் தமிழீழத்துக்கான பொதுவாக் கெடுப்பு எனக் கட்சி பிரகடனப்படுத்தி இருந்தது. மூதூர், கல்முனை, சம்மாந்துறை, புத்தளம் ஆகிய தொகுதிகளில் முஸ்லிம் வேட்பாளர்களை நிறுத்திய கட்சியால் இதனை ஏன் செய்ய முடியாமற்போனது ?


மட்டக்களப்பில் ஒரு முஸ்லிமை நிறுத்தியிருந்தால் முஸ்லிம் மக்கள் கட்சியைச் சந்தேகத்துடன் பார்த்திருக்க மாட்டார்கள். மட்டக்களப்பு, கல்முனை (பின்னாளில் முஸ்லிம் காங்கிரஸை உருவாக்கிய அஷ்ரப்தான் இங்கு வேட்பாளர் ) ஆகிய தொகுதிகள் கட்சியின் வசம் வந்திருக்கும். இந்த தவறுக்கு யார் பொறுப்பு? பல கட்சிகளில் பயணித்து இன்று தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவராக இருக்கும் வீரசிங்கம் ஆனந்தசங்கரி, தற்போதைய எதிர்க்கட்சித்தலைவர் இராஜவரோதயம் சம்பந்தன் ஆகிய இருவரும் இக்கேள்விகளுக்குப் பதிலளிக்கக் கடமைப்பட்டவர்கள்.

1977 தேர்தலில் தமிழீழ இலட்சியத்தைக் கைவிடமாட்டோம் எனத் தந்தை செல்வாவின் நினைவிடத்தில் சத்தியம் செய்தவர்கள் இவர்கள். இந்த இருவரும்தான் தொடர்ந்து அரசியலில் இருப்பவர்கள். அன்று தமிழ் இளைஞர்களின் உணர்வுகளைத் தூண்டி விட்டுவிட்டு இன்று சிங்கக் கொடியையும், ஆட்டிக் கொண்டு தனது கைகள் இரத்தக்கறை படியாதவை எனச் சொல்ல முடிகிறது சம்பந்தரால். அதுமட்டுமல்ல கட்சிக்குள் புலி வாசனை வந்துவிடக்கூடாது என்பதில் கவனமாக இருக்கிறார். இராஜதுரை துரோகியென ஒரு காலத்தில் கட்சியால் குற்றஞ்சாட்டப்பட்டவர் என்றால் இவர்களெல்லாம் யார்? இராஜதுரை தான் வெளியேற நிர்ப்பந்திக்கப் பட்டமை தொடர்பாக அளித்த விளக்கம் நியாயமானதாக மனதுக்குத் தெரிந்தாலும் ஐ.தே.க. அரசில் இணைந்து கொண்டமை தமிழ் மக்களால்ஜீரணிக்க முடியாததாக இருந்தது. என்பது உண்மைதான்.

இன்று மாவீரர் பட்டியலை எடுத்தால் ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட்டால் படுகொலை செய்யப்பட்டமை குறித்த விபரங்கள். காணப்படுகின்றன. இச்சம்பவங்களுக்குப் பொறுப்பனோர் இன்று தமிழ்த் தேசியவாதிகள் இராஜதுரை மட்டும் துரோகி என்று எம்.கே. சிவாஜிலிங்கம் நிறுவ முற்பட்டார். பிராந்திய ரீதியில் இக்குழுக்களுக்குத் தலைமை தாங்கிய இரா.துரைரத்தினம், கோவிந்தம் கருணாகரம் (ஜனா ) ஆகியோரை எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலிலும் தமிழீழத் தேசியத்தின் பெயரால்கூட்டமைப்பு நிறுத்தத் தீர்மானித்துள்ளதாகச் செய்திகள் கசிந்துள்ளன.

இன்று வித்தியாவின் வழக்கில் வழங்கப்பட்ட

( 18 ஆம் பக்கம் பார்க்க)


செ. இராஜதுரை



- நோக்கன் -

# காவிகளின் அரசியலும் காவி படிந்த அரசியலும்

புதிய அரசமைப்புத் திருத்தச் சட்டத்தில் 13 ஆம் சட்டத்திலும் பார்க்க அதிக அதிகாரங்கள் உள்ளன என சம்பந்தனும், சுமந்திரனும் சொல்லி வருகின்றனர். இதில் தமிழர்களைத் திருப்திப்படுத்தக் கூடிய அரிய பல விடயங்கள் புதைந்திருப்பதாக தமிழர்களுக்கு "நிலாச் சோறு" ஊட்டிக் கொண்டிருக்கின்றனர் அவர்கள். எதை எப்படிச் செய்ய வேண்டுமோ? அந்நிலையை விட்டு தீர்வை, வேறொங்கோ தேடுவதாக அவர்களின் அரசியல் நடவடிக்கைகளும், அரசியல் சந்திப்புகளும் எமக்குச் சொல்லி நிற்கின்றன. உதாரணத்திற்கு காணி விடுவிப்புத் தொடர்பில் படைத் தரப்பைச் சந்தித்துப் பேசியது மக்களிடையே விசனத்தை ஏற்படுத்தியிருக்கிறது. காரணம் அரசியல் பேச்சுக்கு செல்லாமல், இராணுவத்தினருடனான பேச்சுக்கு சென்றிருப்பதே. சட்டத்தின் மீதும், அரச அதிகாரத்தின் மீதான நம்பிக்கையை இழக்கச் செய்து இராணுவ அதிகாரத்தின் மீதான நம்பிக்கையை அதிகரிக்கச் செய்வதாக மக்கள் கருதுகின்றனர்.

இலங்கைத் தீவின் கடந்த கால அரசியல் நடவடிக்கைகளை கூர்ந்து அவதானித்தால் அதன் அரசியல் பின்னணி என்ன? இனப்பிரச்சினைக்கு ஏன் இன்னும் ஒரு தீர்வை எட்டாது காலம் நகர்கின்றது என்பது புரியும். இலங்கையில் ஏற்படக்கூடிய நல்லிணக்க அரசியலுக்குத் தடையான இரண்டு விடயங்களில் மிகவும் முக்கியமானது பௌத்த மத ஆதிக்கம் - குறிப்பாக மகாநாயக்க பீடங்களின் தலையீடே. புதிய அரசியல் பிரவேசம் செய்கின்றவர் தொட்டு ஜனாதிபதி, பிரதமர் அதிகாரத்தில் இருப்பவர்கள் வரை முதலில் சந்தித்து ஆசி பெறுவது இந்த மகாநாயக்க தேரர்களைத்தான்.

அதுமட்டுமல்ல நாடாளு மன்றிலும் சரி அல்லது அமைச்சரவையின் முக்கிய தீர்மானங்களிலும் சரி, சாதாரண அதிகார விடயங்களிலும் சரி முதலில் சம்மதம் பெறப்படுவது மகாநாயக்க தேரர்களிடம்தான். சுருங்கச் சொன்னால் "எல்லாமே இங்கு மகாநாயக்கர்கள்தான்". அவர்களை பகைப்பதோ எதிர்ப்பதோ என்பது முடியாத காரியம். அவர்கள் நாட்டில் நடக்கும் ஒவ்வொரு அரசியல் நடவடிக்கைகளையும் கண்ணுக்குள் எண்ணை ஊற்றிக் கொண்டு பார்ப்பதைப்போல அவர்கள் பார்த்துக் கொண்டிருப்பர். அதுவும் சிறுபான்மை தொடர்பான எந்தவொரு நகர்வும் அவர்களின் ஆசீர்வாதம் இன்றி நடைபெறாது. சிறுபான்மையினரை எப்படி அடக்குவது, அழிப்பது, எந்த இனத்தை அல்லது மதத்தைக் குறி வைப்பது என எல்லாமே இவர்களின் கண்ணசைவின்றி நிறைவேறாது.

இதை கடந்த காலம் நன்றாகவே பதிவு செய்து வைத்திருப்பதை சம்பந்தன் நன்கு அறிவர். ஏன் கடந்த காலத்தே இலங்கை அரசியிலில், குறிப்பாக சுதந்திரத்தின் பின்னர் வந்த ஜனாதிபதியோ அல்லது பிரதமரோ பௌத்த சமயத்தைச் சார்ந்தவர்களை அல்லது அதைத் தழுவியவர்கள்



மட்டுமே அனுமதிக்கப்பட்டனர். முன்னாள் ஜனாதிபதிகளான ஜே.ஆர். ஜெயவர்த்தன, மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் குடும்பங்கள் அடிப்படையில் கிறிஸ்தவத்தை சார்ந்தவர்களே -அதுவும் அவர் சிங்களவராகவும் இருக்க வேண்டும் என்பதும் ஒரு விதி. அவர்களில் கணிசமானவர்கள் பௌத்த சிங்களத்தை தீவிரமாக நேசிப்பவர் களாக - விசுவாசிப்பவர்களாக இருக்க வேண்டும். அல்லது அல்லது அப்படியானவர்களாக தம்மை மாற்றிக் கொள்ள வேண்டியவர்களாகவும் இருப்பது நன்கு அறிந்த விடயம். இந்த லட்சணத்தில் நாம் அதிகம் எதிர்பார்ப்தென்பது குஞ்சுகள் தமது தாய் கோழியிடம் பாலை எதிர்ப்பார்ப்பதைப் போன்றதே.



இலங்கையில் நல்லிணக்கம் ஏற்பட வேண்டும். சமாதானம் ஏற்பட வேண்டும். சுமூக அரசியல் நடைபெற வேண்டும் என்று எதிர்பார்க்கின்ற அனைத்துத் தரப்பினரும் அறிந்தும் - அறியாத விடயம் என்னவென்றால் தமது முயற்சிகளை அவர்கள் தொடங்க வேண்டியது அவர்களது காரியங்களிலல்ல... நாடாளுமன்றத்திலல்ல... அல்லது சமாதானத்தை வலியுறுத்தும் தூதரகங்களிலல்ல... அவர்கள் தமது முயற்சிகளைத் தொடங்க வேண்டிய இடம் பௌத்த பீடங்களான இந்த மகாநாயக்க பீடங்களிலேயே. இந்த யதார்த்த உண்மை - மர்மம் நம் அரசியல்வாதிகளுக்கு தெரியாமல் போனது ஆச்சரியமே என்கிறவரும் அரசியல்வாதிகளுள் ஒருவர்தான்.

மகாநாயக்க பீடங்களைப் பொறுத்த வரை அவர்கள் ஒட்டுமொத்த பௌத்த - சிங்கள மக்களின் நலன்களில் அக்கறையுள்ளவர்கள் என்பதை விட அக்கறையுள்ளவர்களாகக் காட்டிக் கொள்ள வேண்டும் என்பதுவும் ஒரு பௌத்த அரசியல் தேவை. அதைவிட அதிகம் அரச வளங்களைக் சுகிப்பதுவும் இந்த பிக்குகளே. எனவே அவர்கள் தம் நலனகள் கெடுவதை ஒருபோதும் விரும்பமாட்டார் - அனுமதிக்க மாட்டார்கள் என்பதே உண்மை. இந்த அனுபவத்தை அண்மைக் கால அரசியல் நடவடிக்கைகள் பற்றி தேரர்களும், அவர்களது பீடங்களும் வெளிப்படுத்தும் அறிக்கைகள் நன்கு உறுதிப்படுத்துகின்றன. ஆனால் அவர்களுக்குப் பின்னர் நல்லிணக்க அரசியல் சக்திகளுக்கு எதிரான, அல்லது அடுத்து ஆட்சி பீடத்தைக் கைப்பற்றத் துடிக்கும் ஒரு தரப்பு செயற்பட்டுக் கொண்டிருப்பதென்று சொல்லப்பட்டாலும், மகாநாயக்கர்களின் ஆசிர்வாதமில்லாத எந்தவொரு தீர்வும் நடைமுறைப்படுத்த முடியாது அல்லது அத்தகைய முயற்சிகள் பல பலப்பரீட்சைகளை எதிர் நோக்க வேண்டிவரும் என்பது தான் உண்மை.

அரசியல் தலைமைகளிலுள்ள அனைத்துத் தரப்பினரும் அடிக்கடி மகாநாயக்கர்களிடம் பூஜைக்குச் செல்வது போலவும், ஆசீர்வாதத்திற்குச் செல்வது போலவும் செல்வது தமது அரசியல் சாதகத்தை வெளிப்படுத்தவே ஒழிய பக்தியிலல்ல. இதை நன்கு அறிந்தவர்களான எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தனும் , முதலமைச்சர் விக்னேஸ்வரனும் கடந்த காலத்தே இந்தப் பீடங்களுக்குச் சென்று தம்மை வெளிப்படுத்திக் கொண்டனர். இருந்தும் அவர்கள் எந்தவித இயைவான சமிக்ஞைகளைக் கொடுக்கவில்லை என்றே கருதலாம்.

ஏனெனில் காணாமல் ஆக்கப்பட்டோருக்காக ஒரு அலுவலகம் திறக்கப்படுவதை எதிர்த்தது இந்த அஸ்கிரிய பீடமே. அவர்களே இலங்கைக்கு இனி ஒரு புதிய யாப்பு தேவை இல்லை என்று தேர்தலைத் தவிர வேறு எதிலும் திருத்தத்துக்கு அவசியம் இல்லை என்றும் கருத்துத் தெரிவித்தார்கள். இருக்கின்ற 9 மகாநாயக்க பீடங்களிலும் அதிக சக்தி வாயந்ததென மக்கள் கருதுவது மல்வத்து - அஸ்கிரிய பீடங்களையே. இதில் வினோதம் என்னவென்றால் பௌத்த மதத்தின் ஆரம்ப கர்த்தா என வருணிக்கப்படும் மூலவர் கௌதம புத்த பிரான் எதைத் துறந்து சென்றரோ அதை நோக்கியே இலங்கை மற்றும் பெரும்பாலான பௌத்த தேரர்கள் சென்று கொண்டிருக்கின்றனர்.

( 18 ஆம் பக்கம் பார்க்க)



# ‘குர்திஷ், கட்டலோனியா’ என்று தணியும் இந்த சுதந்திர தாகம்

அண்மையில் ஈராக்கின் குர்திஷ் பிராந்திய அரசாங்கத்துக்கு உட்பட்ட பகுதியிலும் ஸ்பெயினின் கட்டலோனியா சுயாட்சி சமூகத்துக்கு உட்பட்ட பகுதியிலும் நடந்த கருத்துக் கேட்பு வாக்கெடுப்புகள் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றன. குர்திஸ்தான் தனி நாடு உருவாக வேண்டும் என்று குர்திஷ் மக்களும் கட்டலோனியா தனி நாடு உருவாக வேண்டும் என்று கட்டலோனியா பிரதேச மக்களும் பெருமளவில் வாக்களித்திருக்கிறார்கள். எதிர்பார்த்தது போலவே, இந்த வாக்கெடுப்புகளை ஏற்க ஈராக்கும் ஸ்பெயினும் மறுத்துவிட்டன.

குர்திஷ்களும் கட்டலோனியர்களும் இந்த உலகின் எதிரெதிர் துருவங்களில் வாழ்கின்ற இனங்கள் என்றாலும், அவர்களுடைய தலையெழுத்துகள் ஒரே மாதிரியாகவே இருக்கின்றன. ஒரு இனம், ஜனநாயகத்தின் தொட்டில் என தன்னைத்தானே அழைத்துக் கொள்ளும் ஐரோப்பியக் கண்டத்தில் இருக்கிறது. மற்றொரு இனம், ஜனநாயகக் காற்று வீசாத பாலை எனக் கருதப்படும் மேற்காசியாவில் இருக்கிறது. கேடலோனியர்கள் ஆயிராமாண்டு காலமாக இருந்துவரும் தமது தாயகத்துக்கான சுயாட்சியை முன்பே வென்றெடுத்தார்கள். பெற்ற சுயாட்சி உரிமைகளை ஸ்பெயின் அரசு பறிக்க முயன்றபோது, சுதந்திரத்தை நோக்கி நகர்ந்தார்கள்.

**சுதந்திர வேட்கை**

குர்திஷ் மக்களின் நிலையோ படுமோசம். குர்திஸ்தான் என்றழைக்கப்படும் அவர்களது தாயகம் ஈராக், ஈரான், சிரியா, துருக்கி ஆகிய நான்கு நாடுகளால் துண்டாடப்பட்டு ஆக்கிரமிக்கப் பட்டிருக்கிறது. மேற்காசியாவின் சாம்ராஜ்ய மும்மூர்த்திகளான துருக்கியர்களும் அரேபியர்களும் பாரசீகர்களும் குர்திஷ்களின் இன அடையாளத்தைக்கூட ஏற்கத் தயாராக இல்லாமல், இனப் படுகொலைகளினூடாகவும் ஒடுக்குமுறைகளின் ஊடாகவும் அந்த இனத்தை அழித்து வந்தனர். 90களில் ஈராக்கில் அமெரிக்கா நுழைந்த பிறகு, அமெரிக்காவின் உள்ளூர் வியூகத்தின் ஒரு பகுதியாகவே இிராக்கிலுள்ள குர்திஷ் மக்களுக்கு என ஒரு பிராந்திய அரசு அமைந்தது. இப்போது தனி நாடாவதற்கான வாக்கெடுப்பை நடத்தியது அந்த அரசுதான். ஈராக்கில் உள்ள குர்திஷ் மக்கள் செப்ரெம்பர் 25இல் நடந்த வெகுசன வாக்கெடுப்பில் கலந்துகொண்டு தங்களுக்குத் தனிநாடு வேண்டும் என வாக்களித்தார்கள். பல முறை நடத்தத் திட்டமிடப்பட்டு முடியாமலேயே போயிருந்த நிலையில், இந்த முறை அது வெற்றிகரமாக நடந்தது. கட்டலோனியாவைப் பொறுத்தவரை ஒக்ரோபர் முதலாம் திகதி நடைபெற்ற வாக்கெடுப்பைச் சட்டவிரோதம் என்று ஸ்பெயின் அரசு கூறினாலும், கட்டலோனிய அரசின் முதலமைச்சர் கார்லஸ் பியூஜ்டிமாண்டின் உள்ளிட்டோர் அதைப் பற்றிக் கவலைப் படாமல் வாக்கெடுப்பை நடத்தினார்கள். ஸ்பெயின் பிரதமர் மரியானா ரஜோயின் மிரட்டல்களும் அவரது அரசின் பொலிஸின் தாக்குதல்களும் ஸ்பானிய ஆளும் தலைகளின் ஆணவப்போக்கும் கட்டலோனியாவில் சுதந்திரம் குறித்து முடிவெடுக்காமல் குழம்பியிருந்த மக்களைக்கூட சுதந்திரத்துக்கு ஆதரவானவர்களாக மாற்றியது. வாக்களித்த 43 வீத மக்களில் 92 வீதமானோர் சுதந்திரம் வேண்டும் என்றே வாக்களித்தார்கள்.



**எதிர்விளைவுகள்**

இவ்விரு நிகழ்வுகளும் உலக அரங்கில் கடுமையான எதிர்விளைவுகளை உருவாக்கியுள்ளன. பெரிய நாடுகள் இதுவரை கட்டலோனியாவையோ குர்திஸ்தானையோ அங்கீகரித்து விடவில்லை. குறிப்பாக, குர்திஸ்தான் வாக்கெடுப்பை முழுமையாக நிராகரித்தார் அமெரிக்க அரசின் செயலர் ரெக்ஸ் டில்லர்சன். இன்றைய உலக ஒழுங்கில் வல்லரசுகளின் போட்டிக்களத்தில் ஏதேனும் ஒரு அணியில் இருந்தால்தான், பிரிவினைப் போராட்டங்கள் வெற்றிபெறுகின்றன என்று பொதுவாகக் கருதப்படுகிறது. சமீபகாலத்தில் தனிநாடுகளாக ஆன தென் சூடான், கொசாவா போன்றவை கூட அதற்கு எடுத்துக் காட்டுகளாகச் சொல்லப்படுகின்றன. எல்லா வல்லரசுகளும் ஒன்று திரண்டு எதிராக நின்றால், ஒரு விடுதலைப் போராட்டத் தைச் சுவடின்றி அழித்துவிட முடியும் என்று நமது போராட்டமான தமிழீழப் போராட்டத்தின் முடிவு காட்டுகிறது.




ஐரோப்பாவில் சுயநிர்ணய உரிமைகள் என்பது வரலாற்று ரீதியாக ஏற்கப்பட்டுவிட்ட ஒரு கோட்பாடு என்று கருதப்படுகிறது. ஆனால், ஆசியாவில் எந்த நாட்டிலும் அதற்கு ஏற்பு இல்லை என்பதும் வெளிப்படை. 90-களில் சோவியத் யூனியன், யூகோஸ்லேவியா, செக்கோஸ்லோவேகியா போன்ற கூட்டமைப்புகள் தகர்ந்து, பல நாடுகள் உருவாயின. அந்தச் சம்பவங்கள், ரஷ்யப் புரட்சியினூடாக விளாடிமிர் லெனினும் முதல் உலகப் போருக்குப் பின் அமெரிக்க அதிபர் உட்ரோ வில்சனும் முன்வைத்த சுயநிர்ணய உரிமைக் கோட்பாடுகள் மேற்குலகில் சட்டபூர்வமாக ஏற்கப்பட்டிருப்பதன் அடையாளம் என்றும் கருதப்பட்டது.

மத்திய, கிழக்கு ஐரோப்பாவில் சோவியத் ஆதிக்கத்தை உடைப்பதற்கு சுயநிர்ணய உரிமை என்கிற ஆயுதத்தை எடுத்த எந்த மேற்கு, தெற்கு ஐரோப்பிய நாடும் தங்கள் நாட்டில் அதே கோரிக்கை எழுகிறபோது அதை ஏற்றுக்கொள்வதில்லை. பழைய சாம்ராஜ்யங்களோ புதிய வல்லரசுகளோ தங்களுடைய தேவைக்கும் நலனுக்கும் ஏற்பவே நாடுகளை உருவாக்கத் துணை புரிகின்றன. இந்தப் பின்னணியில்தான் கட்டலோனியாவில் வாக்கெடுப்பு, ஸ்பெயினில் விடுதலைக்குப் போராடும் பாஸ்க் இனத்தவர்க்கும், அருகே பிரிட்டனில் ஸ்கொட்களுக்கும் உற்சாகத்தை அளித்தது. ஆனால், ஸ்பெயின் அரசின் மனநிலையையே பிரிட்டன், ஜெர்மனி, பிரான்ஸ் போன்ற அரசுகள் பிரதிபலித்தன.

**வல்லரசுகளுக்குச் சவால்**

ஐரோப்பாவிலேயே இப்படி என்றால், குர்திஸ்தான் விவகாரத்தில் கேட்கவே வேண்டாம். உள்ளூர் தாதாக்களான ஈராக், ஈரான், சிரியா, துருக்கி போன்ற நாடுகளுக்குள் ஆயிரம் போட்டியிருக்கலாம். ஆனால் குர்திஸ்தான் என்கிற ஒரு அரசு உருவாகிவிடக் கூடாது என்பதில் அவை ஒருமித்த கருத்தைக் கொண்டிருக்கின்றன. வாக்கெடுப்பு நடந்த நாள் முதலாகவே குர்திஸ்தான் பிராந்திய அரசாங்கத்தின் மீது அனைத்துவிதமான தடைகளையும் அவை போடத் தொடங்கின. ஈராக்கிய குர்து அரசின் தலைநகரமான எர்பிலுக்கு பயணிகள் விமானப் போக்குவரத்தைத் தடைசெய்தது ஈராக். அங்கேயிருந்து வெளிவரும் எண்ணெய் குழாய்களை அடைக்கப்போவதாக மிரட்டியது துருக்கி. குர்துப் பகுதியுடனான எல்லையை மூடியது ஈரான். எல்லாவற்றுக்கும் மேலாக, சதாம் ஹூசைனின் ஈராக்கில் இனப்படுகொலைக்கு

( 18 ஆம் பக்கம் பார்க்க)

...த் திரைப்படம்
... 29 ம்
...த்துடன்
...ஒரு காட்சியும்
... 4:30, 6:30
...
... பெறப்பட்டதால்
...ரமிடலுக்கு
...தரவாளர்களை
..." என்கிறார்






சதுரங்க வேட்டை -2, கர்ஜனை, மோகினி, படங்களில் தற்போது நடித்து முடித்திருக்கிறார் த்ரிஷா. விஜய் சேதுபதியுடன் நடிக்கும் 96 படமும் நிறைவுறும் தறுவாயில் உள்ளது.

தொடர்ந்து அறிமுக இயக்குநர் திருஞானத்தின் இயக்கத்தில் "பரமபதம்" படத்தில் நடிக்கவுள்ளார். நாயகியை மையமாகக் கொண்ட இந்தப் படத்தில் அவர் மருத்துவராக நடிக்கவுள்ளாராம்.

சங்கர் இயக்கத்தில் ரஜினியின் 2.0 படம் 3 டி தொழில்நுட்பத்தில் தயாராகி வருகிறது. படத்தில் எமி ஜாக்சனின் ரோபோ தோற்றம் இரகசியமாக வைக்கப்பட்டிருந்தது. ஆனால் இப்போது வெளியாகியிருக்கும் போஸ்ரால் அது வெளிப்பட்டிருக்கிறது.


எமி ஜாக்சனுக்கான ரோபோ உடைக்கா பிரத்தியேக தொழில்நுட்ப கலைஞர்கள் பயன்படுத்தப்பட்டனர். அவர்கள் எமியின் உடலை ஒவ்வொரு இன்ச்சாக அளவெடுத்து உடையை வடிவமைத்தனராம்.


உடை தயாரானதும் அதை அணிந்து பார்த்த எமி "ரோபோ தோற்றத்தில் என்னை எனக்கே அடையாளம் தெரியவில்லை" என மகிழ்ச்சியுடன் கூறியிருக்கிறார்.

விவேகம் படத்தை தொடர்ந்து அஜித்தின் அடுத்த படத்தை சிவா அல்லது சங்கர் இயக்குவார் எனத் தகவல்கள் வெளியாகின.

எனினும் சங்கர் இந்தியன்.2 படத்தை இயக்கப் போகிறார் என்பதால் அஜித்தின் அடுத்த படத்தை சிவாவே இயக்குவார் என்பது ஏறத்தாழ முடிவாகி விட்டது.

"அஜித் 58" படத்திற்கான பேச்சுக்கள் நடத்தப்படுகின்றன. இந்தப் படத்தில் அஜித் பொலிஸ் வேடத்தில் நடிக்கவுள்ளார். ஏற்கனவே பொலிஸ் 3 படங்களில் அஜித் பொலிஸாக நடித்துள்ளார்.



# நம்பிக்கையின் சிதைவு



அடுத்த வருடம் ரஷ்யாவில் நடைபெறவுள்ள உலகக் கிண்ணப் போட்டிகளில் பங்கு பற்றுவதற்கான நேரடித் தகுதியை தட்டுத்தடுமாறி ஆர்ஜென்ரீனா அணி பெற்றுள்ள நிலையில் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட நெதர்லாந்து அணி தகுதி பெற முடியாமல் வெளியேறி உள்ளது. 1974, 1978, 2010 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற உலகக் கிண்ணத் தொடர்களின் இறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றும் கிண்ணம் வெல்ல முடியாத துரதிர்ஷ்ட அணிதான் நெதர்லாந்து.

அதிலிருந்து நெதர்லாந்து அணி மீண்டு கடந்த 2014ஆம் ஆண்டு பிறேசிலில் நடைபெற்ற உலகக் கிண்ணத் தொடரின் அரையிறுதிப் போட்டி வரை முன்னேறினாலும் மூன்றாம் இடத்தையே அவர்களால் பிடிக்க முடிந்தது. எனவே 1970களுக்குப் பின்னர் சுமார் ஒரு தசாப்த காலமாகத் தமது ஆதிக்கத்தை சர்வதேச உதைபந்தாட்ட உலகில் செலுத்தி வந்த நெதர்லாந்து இம்முறை நேரடித்தகுதி பெறாதது மிகுந்த அதிர்ச்சியை ரசிகர்களிடம் ஏற்படுத்தி உள்ளது. ஆனாலும் தகுதிகாண் போட்டிகளில் நெதர்லாந்து அணியினர் பெற்ற வெற்றிகளே அவர்கள் நேரடித் தகுதியைப் பெறுவார்களா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தி இருந்தது.

ஏனென்றால் பிரான்ஸ், சுவீடன், நெதர்லாந்து, பல்கேரியா, லக்ஸ்சம்பேர்க், பெலாரஸ் அணிகள் அடங்கிய இக்குழுவில் முதலிடம் வகிக்கும் அணியே நேரடித் தகுதியைப் பெறலாம். இரண்டாவதாக வரும் அணி பிளே ஓவ் சுற்றில் விளையாடி தகுதி பெறுவதற்கான வாய்ப்பும் இருந்தது. பிரான்ஸ் ஏற்கனவே நேரடித்தகுதியைப் பெற்ற நிலையில் 10 தகுதிகாண் போட்டிகளின் முடிவில் நெதர்லாந்து அணி 6 வெற்றிகளுடன் 19 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்திலேயே இருந்தது. சுவீடனும் 6 போட்டிகளில் வெற்றி பெற்று 19 புள்ளிகளைப் பெற்றாலும் அடித்த கோல்களின் அடிப்படையில் அக்குழுவில் இரண்டாம் இடத்தில் இருந்தது.

எனவே கடந்த வாரம் நடைபெற்ற சுவீடன் அணிக்கெதிரான போட்டியில் 7 கோல்கள் நெதர்லாந்து அடித்தாலே தகுதி பெறுவதற்கான வாய்ப்பு இருந்தது. ஆனாலும் அந்தப்போட்டியை 2 : 0 என்றே நெதர்லாந்து அணியால் வெல்ல முடிந்ததால் உலகக் கிண்ணத்திற்குத் தகுதி பெற முடியாத நிலமை ஏற்பட்டது.

இந்த அதிர்ச்சி ஒருபுறம் என்றால் நெதர்லாந்து அணியின் இந்த வெளியேற்றத்தை அடுத்து அவ்வணியின் தலைவரான அர்ஜென் றொபன் சர்வதேச போட்டிகளில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளமை ரசிகர்களை மேலும் வருத்தமடையச் செய்துள்ளது. ஆனாலும் 33 வயதான அர்ஜென் றொபன் ஜேர்மனியில் நடைபெற்று வரும் புண்டலிஸ்கா லீக் தொடரில் பெயோர்ண் முனிச் அணிக்காக தொடர்ந்தும் விளையாடுவார் என்று அறிவித்துள்ளமை சற்று ஆறுதல் எனலாம்.



# நீ வருவாயென...

சில வாரங்களுக்கு முன்னதாக றுறுநு நிர்வாகமும் சொனி பிக்சர்ஸ் நெட்வேக்ஸ் இந்தியாவும் இணைந்து எதிர்வரும் டிசம்பர் மாதம் 8, 9ஆம் திகதிகளில் டெல்லியில் உள்ள இந்திராகாந்தி உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறவுள்ள றுறுநு டுளைந போட்டி குறித்த அறிவிப்பை வெளியிட்டிருந்தனர். இந்நிலையில் இந்திய வம்சாவழியைச் சேர்ந்த கனடிய தொழில்முறை றெசிலிங் வீரரும் றுறுநு சம்பியனுமான ஜிண்டர் மகால் கடந்தவாரம் தனிப்பட்ட ரீதியில் சச்சின் டெண்டுல்கரை மும்பையில் உள்ள அவரது வீட்டில் சந்தித்துள்ளார். இதன் போது சச்சினது மகன் அர்ஜூன் டெண்டுல்கரும் கூடவே இருந்துள்ளார். டெல்லியில் நடைபெறும் போட்டியைப் பார்வையிட சச்சின் டெண்டுல்கரை அழைப்பதே இச்சந்திப்பின் நோக்கமாக இருந்துள்ளது.

இந்தச் சந்திப்பின் பின்னர் தனது ருவிற்றர் வலைத்தளத்தில் சச்சின் டெண்டுல்கர் 'நீங்கள் எங்களைப் பெருமைப்படுத்துகின்றீர்கள். டெல்லியில் நடைபெறும் போட்டிக்கு எங்களை அழைத்ததற்கு நன்றி. டிசம்பர் 8ஆம் திகதி நடைபெறும் போட்டியைப் பார்வையிடுவதற்கு வருவதாக ஜிண்டர் மகாலிடம் நான் உறுதியளித்திருக்கிறேன்' என்று பதிவிட்டுள்ளார். இந்தியாவில் றுறுநு றெசிலிங் போட்டிகளுக்கான மவுசு ரசிகர்கள் மத்தியில் அதிகமாகவே காணப்படுகின்றது. குறிப்பாக கிரிக்கெட் போட்டிகளுக்கு அடுத்து தொலைக்காட்சிகளில் அதிக ரசிகர்கள் பார்வையிடும் விளையாட்டாக றுறுநு றெசிலிங் போட்டிகளே காணப்படுகின்றன. எனவே ரசிகர்களின் இந்த ஆர்வத்தை மேலும் தூண்டி தமது வணிக ரீதியான நோக்கத்தை நிறைவேற்ற சச்சினையும் சம்பந்தப்பட்டவர்கள் ஒரு துருப்புச்சீட்டாகப் பயன்படுத்துகின்றார்கள் என்பதே இச்செய்தி உணர்த்தும் உண்மை எனலாம்.




தொகுப்பு :- சி.விமலன்

# மகிழ்வான விடைபெறல்

இந்திய அணியின் வேகப்பந்துவீச்சாளரான ஆசிஷ் நெஹ்ரா சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். 2019 உலகக் கிண்ண ஒருநாள் போட்டிகளைக் கருத்திற்கொண்டு தற்பொழுதே இந்திய அணியை கட்டியெழுப்பும் நடவடிக்கைகளை எம்.எஸ்.கே.பிரசாத் தலைமையிலான இந்தியத் தேர்வுக் குழுவினர் மேற்கொண்டு வருகின்றனர். அதனடிப்படையிலேயே இலங்கை, அவுஸ்ரேலிய அணிகளுடனான ஒருநாள் மற்றும் இருபதுக்கிருபது தொடர்களில் யுவராஜ் சிங், சுரேஷ் ரெய்னா, அஸ்வின், ஜடேஜா போன்ற சிரேஸ்ர வீரர்களுக்கே அணியில் இடம் வழங்கப்படவில்லை.

இந்நிலையில் அவுஸ்ரேலியாவுடனான இருபதுக்கிருபது தொடரில் 38 வயதான நெஹ்ரா உள்வாங்கப்பட்டமை ஆச்சரியமாகவே நோக்கப்பட்டது. ஆனாலும் அவரது திறமை மீது எந்தவிதமான சந்தேகமும் ரசிகர்களுக்கு ஏற்படவில்லை. அதற்குக் காரணம் கடந்த வருடம் இந்தியாவில் நடைபெற்ற இருபதுக்கிருபது உலகக் கிண்ணத் தொடரிலிருந்து இம்முறை நடைபெற்ற ஐ.பி.எல். போட்டிகள் வரை அவரது பந்துவீச்சு அபாரமாக இருந்த காரணத்தினாலேயே. எனவே அவுஸ்ரேலியத் தொடருக்கு முன்னதாகவே தனது ஓய்வு முடிவை தேர்வுக் குழுவினரிடம் நெஹ்ரா தெரிவித்திருக்க வேண்டும். அதனால்தான் அவரை அணியில் உள்வாங்கி அவரது சொந்த இடமான டெல்லியில் நடைபெறவுள்ள நியூசிலாந்துடனான முதல் இருபதுக்கிருபது போட்டியோடு கௌரவமாக வழியனுப்ப அவர்கள் சம்மதித்திருக்க வேண்டும்.

இச்சந்தர்ப்பத்தில் ஒரு விடயத்தை நினைவுகூர வேண்டியுள்ளது. இந்திய அணியின் முன்னாள் அதிரடி நாயகனான விரேந்திர ஷேவாக் தானும் தனது சொந்த மண்ணான டெல்லியில் நடைபெறும் போட்டியிலேயே ஓய்வு பெற விரும்பி இருந்தார். ஆனாலும் அவருக்கு அன்றைய காலப்பகுதியில் தேர்வுக்குழுவில் இருந்தவர்கள் அனுமதி அளிக்கவில்லை. அந்தக் குறை அவர் மனதில் இன்றுவரை இருந்தே வருகின்றது. இதை அவரே ஒரு தடவை வெளிப்படையாகக் கூறியும் இருந்தார். எனவே 18 வருடங்களாக இந்திய அணிக்காக விளையாடி வரும் நெஹ்ராவுக்கு இத்தகைய ஒரு போட்டி மூலம் வழியனுப்ப தேர்வுக்குழுவினர் எடுத்த முடிவு வரவேற்கத்தக்கதே.

இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 21.10.2017 அன்று 107, இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.